வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 15.02.2022 செவ்வாய்க்கிழமை இதழ் : 72 பக்கங்கள் : 16




# நாட்டில் 100 சதவீதம் ஒமைக்ரோன் பரவல்!

## முழுமையான தடுப்பூசியே பலன்! தேசிய வைத்தியசாலை தகவல்!!

கொழும்பு, பெப்ரவரி 15

நாட்டில் 100 சதவீதம் ஒமைக்ரோன் தொற்றுப் பரவியுள்ளது. முழுமையாக தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்களால் ஒமைக்ரோன் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறமுடியாது என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் அன்ரனி மென்டிஸ் தெரிவித்தார். 15

## பயங்கரவாத திருத்தச் சட்டமூலத்தை சவால் செய்து உயர் நீதிமன்றில் மனு!


கொழும்பு, பெப். 15

1979 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்தை (தற்காலிக ஏற்பாடு) திருத்துவதற்காக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட திருத்தச் சட்டமூலத்தை சவால் செய்து நேற்று திங்கட்கிழமை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்தத் திருத்தச் சட்டமூலம் இலங்கையின் அரசியலமைப்பை மீறுவதாக தீர்ப்பளிக்குமாறு விசேட மனுவில் கோரப்பட்டுள்ளது.

மாற்றுக்கொள்கைகளுக்கான 15

## வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று தேர்



வடமராட்சி,பெப். 15

வரலாற்று பிரசித்தி பெற்ற வடமராட்சி - பருத்தித்துறை - வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு 15

## மார்ச்சில் இலங்கைக்கு வருகிறார் ஜெய்சங்கர்



கொழும்பு, பெப். 15

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர், மார்ச் 18 அல்லது 20 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசி ரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். 15

## ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை விவகாரம் 3ஆம் திகதி!

கொழும்பு, பெப். 15

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பான எழுத்துமூல அறிக்கை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்சலெட்டினால் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த அறிக்கை மார்ச் 3 ஆம் திகதி விவாதிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த அறிக்கையின் பிரதியை 15

## டெங்கு தாக்கத்தால் மாணவன் மரணம்!

வடமராட்சி, பெப். 15

டெங்கு நோய் தாக்கத்தால் தென்மராட்சியில் 10 வயது மாணவன் ஒருவர் உயிரிழந்தார்.

மீசாலை வீரசிங்கம் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவில் கல்வி கற்றுவந்த கொடிகாமத்தை சேர்ந்த வ. அஜய் (வயது 10) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

டெங்கு நோயால் பீடிக்கப்பட்ட இவர் கடந்த வாரம் யாழ். போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று 15

## இந்திய பிரதமர் மோடியை அழைக்கிறார் கோட்டாபய

கொழும்பு, பெப். 15

எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது வெளிவிவகார 15

## தீவுகளுக்கான போக்குவரத்து நெருக்கடியை தீர்ப்பது கடினம்

### கைவிரித்தார் அரசாங்க அதிபர்



யாழ்ப்பாணம், பெப்.15

தீவுப் பகுதிக்கான பொதுப் போக்குவரத்தில் ஏற்படும் தடைகள் தொடர்பில் மாவட்ட மட்டத்தில் பல கூட்டங்களை நடத்தியும் தீர்வு கிடைக்கவில்லை என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே 15

## தமிழ் தேசியப் பரப்பில் இயங்கும் கட்சிகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம்

கொழும்பு, பெப். 15

தமிழ் தேசியப் பரப்பில் இயங்கும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன அமைப்புகள் இணைந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம் ஒன்றை அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக எதிர்வரும் நாளை புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் குறித்த தரப்பினருக்கு இடையில் சந்திப் பொன்று நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதனை தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய கூட்டணிகளின் அங்கத்துவக் கட்சிகள் இது தொடர்பாக ஆராய விருக்கின்றன.

அதேபோன்று, ஜெனிவாவில் அடுத்த மாதம் மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் 15




அவசரப் பணத் தேவைக்கு
உதவும் நம்பகமான உறவினர்
உங்கள் தங்க ஆபரணங்களுக்கு அதிஉயர் முற்பணத் தொகையுடன்

- 0.71% ஆகக் குறைந்த மாதாந்த வட்டி
- நட்புறவுடன் கூடிய செயற்திறன் மிக்க சேவை
- மீண்டும் மீண்டும் புதுப்பிக்கும் வசதி
- தேவைக்கேற்ப மீள செலுத்தும் வசதி
- மறைமுக கட்டணங்கள் இல்லை
- உங்கள் இரகசியத் தன்மைக்கான பாதுகாப்பு உத்தரவாதம்

மேலதிக விபரங்களை அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இப்படியும் நடக்கிறது...!

எண்பதுகளில் ஒருநாள், யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இந்த ஊர்க்குருவி நின்றுகொண்டிருந்தார்.

வைர மாளிகை விளம்பரங்களுடன் ஓர் உயரமான மனிதர் அன்றைய பத்திரிகைகளை விற்றுக்கொண்டு, பஸ் நிலையத்தில் ஒவ்வொரு தரிப்பிடமாக முன்னால் வந்து கத்திக்கத்தி, பத்திரிகையை விற்றுக்கொண்டிருந்தார்.

எண்பதுகளுக்கு முன்னர் யாழ்ப்பாண பஸ் நிலையத்திற்கு போய் வந்தவர்களுக்கு இப்போது அந்த வைர மாளிகை நினைவில் வந்துசென்றிருப்பார்.

"அதிசயம், ஐம்பது குற்றவாளிகள்" என்று கத்திக் கொண்டே அவர் சென்று கொண்டிருந்தார்.

அருகில் நின்ற ஒருவர் ஆர்வத்துடன் பத்திரிகையை விலைக்கு வாங்கிப் பக்கங்களைப் புரட்டினார். "ஐயா, நீங்கள் கத்தியது போன்று எந்தச் செய்தியும் இல்லையே" என்றார்.

"இதுதான் அதிசயம், ஐம்பத்தொரு குற்றவாளிகள்" என்று 'வைர மாளிகை' அடுத்த தரிப்பிடத்தில் கத்திக்கொண்டிருந்தார்.

இந்தச் சம்பவம்தான் அந்தப் பே ட்டியைப் பார்த்தபோது ஞாபகத்திற்கு வந்தது. சிறீதரன் எம். பி. இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதிய விடயத்தில் தனி ஆவர்த்தனம் எடுப்பது பற்றி ஏற்கனவே இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

இதுதொடர்பாக நான் எழுதிய மறுதினம் என்னைத் தொடர்புகொண்ட நண்பர் ஒருவர், "இது எல்லாம் அரசியல் ஐசே, இதைக்கூட புரிந்துகொள்ள முடியாத நீங்கள் எல்லாம் அரசியல் கருத்துச் சொல்லிக்கொண்டு..." என்று திட்டியிருந்தார்.

அதுபற்றி அப்போது பெரிதுபடுத்தாமல் விட்டுவிட்டேன். அது அவரின் ஊகம், அதனை பொதுவெளியில் கதைப்பது சரியல்ல என்பதால்.

ஆனால், 'டான் ரீ.வி'யில் ஞாயிறன்று ஒளிபரப்பான நிகழ்ச்சி ஒன்றில் சிறீதரனின் கருத்துக்களை கேட்டபோது, அன்று அந்த நண்பர் சொன்னது சரியாகத்தான் இருக்குமோ என்று எண்ணத் தோன்றியது.

பதின்மூன்றை வலியுறுத்தி கடிதம் எழுதுவதுதான், ரெலோவின் ஆரம்ப முயற்சியாக இருந்தது என்பது உண்மைதான். ஆனால், பதின்மூன்றை வலியுறுத்தி எழுதும் கடிதத்தில் கையெழுத்திடமுடியாது என்று சம்பந்தன் ஐயா விடாப்பிடியாக இருந்ததால்தான், அந்த முயற்சியில் மனோ கணேசனும், ஹக்கீமும் விலகினார்கள் என்பதும் இரகசிய மானதல்ல.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி எழுதப்படும் இந்தக் கடிதத்தில் கையொழுத்திட முடியாது என்பதுதான் மனோ கணேசன் முன்வைத்த வாதம். அப்படியானால் கடிதம் சொல்வது என்ன என்பது அதனை படித்து மட்டுமே அறிந்துகொள்ளவேண்டியதல்ல.

ஆனால், தமிழர்களின் தீர்வை பதின்மூன்றுக்குள் முடக்கிவிட்டார்கள். ஒற்றையாட்சிக்குள் முடக்கிவிட்டார்கள் என்று முன்னணி திரும்பத்திரும்ப கூறியபோது, ஒரு பொய்யை திரும்பத் திரும்ப சொன்னால் அது பொய்யாகிவிடும் என்பதுபோல பலராலும் நம்பப்படலாயிற்று.

அப்போதுதான், முன்னணி அதனை வைத்து பேரணி நடத்த முன்வந்தது.

எங்கே இது முன்னணிக்கு சாதகமாகி விட்டாலும் என்றுதான் சிறீதரன் கூட்டமைப்புக்குள் அந்தக் கடிதத்திற்கு எதிராகக் குரல்கொடுக்க ஆரம்பித்தார்.

ஆக, முன்னணிக்கு மாற்று கூட்டமைப்புக்குள்ளும் இருக்கிறது என்ற மாயையை உருவாக்கும் முயற்சியே இது என்று அந்த நண்பர் சொன்னது அவரின் ஊகம் என்று அப்போது நினைத்திருந்தேன்.

ஆனால், அந்தப் பேட்டியில் சிறிதரன் பதின்மூன்றை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று திரும்பத்திரும்பக் கூறிய சம்பந்தன் ஐயா எப்படி அதில் கையெழுத்திடலாம் என்று கேட்டதைப் பார்க்கும்போது, இவர் இந்தக் கடிதத்தை படித்துப் பார்த்துவிட்டு கதைப்பவர் போல தெரியவில்லை.

மாறாக, அந்த நண்பரின் ஊகம்தான் காரணம் போலவே இருந்தது.

அந்தக் கடிதத்தை படித்துப் பார்த்துவிட்டு, வரிக்கு வரி விளக்கமளித்து தனது கட்சிக்காக போராடும் போராளியாக இல்லாமல், இவ்வாறு கருத்துரைப்பதும் 'சேம் சைற்' கோல்போட்ட உதைபந்தாட்ட வீரரின் நிலைதான்.

எப்படியோ கடந்த தேர்தலில் தவறான முடிவெடுத்ததில் பல ஆயிரம் வாக்குகளை இழந்தபோதிலும், கிளிநொச்சி மண் கைகொடுத்ததால் எம். பியானதுபோலவே அடுத்த தேர்தலையும் சந்திக்கநேரும்.

தட்டித்தவறி மாகாண சபைக்கு தேர்தல் நடந்தால், கிளிநொச்சியில் தனது படையணியை இறக்கி வெற்றிபெறவைப்பது அவருக்கு கடினமானதாகவே இருக்கப் போகின்றது. பதின்மூன்றை ஏற்கமறுத்தவிட்டு, அதில் கிடைக்கும் பதவியை அனுபவிக்க அவரும் விரும்பமாட்டார்.

இந்த இடைவெளியைப் பயன்படுத்தி அவருக்கு 'பிடிக்காத சிலர்' சுழித்து ஓடி வென்றுவிட்டால், அவ்வாறு வெற்றி பெறுபவர், அடுத்த பாராளுமன்ற தேர்தலில் அவருக்கு 'குடைச்சல்' கொடுக்கவும் வழிவகுக்கலாம்.!

- ஊர்க்குருவி

# ஊழியர் சேமலாப நிதியில் கைவைக்க இடமளியோம்

## சஜித் பிரேமதாஸ திட்டவட்டம்

**கொழும்பு, பெப். 15**

**பண மோசடியில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே ஒரு இலட்சம் வேலைத்திட்டம் என்ற விளையாட்டை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது என எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.**



இதற்காகவே ஊழியர் சேமலாப நிதியத்திலும் கைவைத்துள்ளது என்றும் இந்த மோசமான செயற்பாட்டைத் தொடர்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் இடமளிக்காது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தற்போது 600-800 மில்லியன் டொலர் மாத்திரமே இருப்பில் உள்ளது. இது அடுத்த 3 வாரங்களுக்கான இறக்குமதி செலவுக்கு மாத்திரமே போதுமானதாக இருக்கும்.

அனைத்து விவசாயிகளுக்கும் இலட்சக்கணக்கில் பாதிப்புக்களை ஏற்படுத்திவிட்டு சிறிய தொகையை நிவாரணங்களை வழங்குகின்றனர்.

இருப்பினும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் தரத்தில் உயர்ந்த உரம், கிருமி நாசினி மற்றும் களை நாசினி உள்ளிட்டவை விவசாயிகளுக்கு நிச்சயம் வழங்கப்படும்.

உண்மையில் இலங்கை பணவீக்கம் அதிகரித்துச் செல்லும் நாடாக மாற்றமடைந்துக் கொண்டிருக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது-என்றார். (அ)

### பாராளுமன்ற ஊழியர்கள் 28 பேருக்கு கொரோனா!

கொழும்பு, பெப். 15

பாராளுமன்றத்தில் சில பிரிவுகளின் தலைவர்கள் உள்ளிட்ட 28 பேருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் பணியாற்றும் 112 பேர் நேற்று முன்தினம் காலை பரிசோதனைக் குட்படுத்தப்பட்டனர்.

இதனடிப்படையில் அவர்களில் 28 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு தொற்றுக்குள்ளானோரை உடனடியாக தனிமைப்படுத்துவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த எண்ணிக்கையுடன் பாராளுமன்றத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 98 ஆக அதிகரித்துள்ளது.

பாராளுமன்றத்தில் விசேட சுகாதார வழிகாட்டல்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. வெளிநபர்கள் வருகை தருவது மட்டுப்படுத்தப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### மேலும் 317 பேர் பூரண குணம்

கொழும்பு, பெப். 15

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த மேலும் 317 பேர் பூரணமாக குணமடைந்த வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய, கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 595,345 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இதுவரை கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 628,116 ஆக அதிகரித்துள்ளது. (அ)

## எரிபொருட்களின் விலைகள் மீண்டும் உயரும் சாத்தியம்!

கொல்மும்பு, பெப். 15

எரிபொருட்களின் விலைகள் எதிர்வரும் இரண்டு வாரங்களில் மீளவும் உயர்வடையும் சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருட்களின் விலையை அதிகரிப்பதற்கு நிதி அமைச்சின் அனுமதியை கோரியுள்ளது.

நிதி அமைச்சின் அதிகார பூர்வ அனுமதி கிடைக்கப் பெற்றதும் விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரத்தில் லங்கா ஐ.ஓ.சீ நிறுவனம் எரிபொருட்களின் விலைகளை உயர்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கடந்த மாதம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 6.8 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## களனிதிஸ்ஸ மின் நிலையத்துக்கு 12 நாள்கள் டீசல் கிடைக்கவில்லை

களனிதிஸ்ஸ அனல்மின் நிலையத்துக்கு 12 நாட்களாக டீசல் கிடைக்கவில்லை என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் டீசல் வழங்குமாறு பலமுறை கோரிக்கை விடுத்தபோதிலும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை என இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் அன்ட்ரூ நவமணி தெரிவித்தார்.

துல்ஹிரிய மற்றும் மத்துகம மின் உற்பத்தி நிலையங்களும் எரிபொருள் பற்றாக்குறையால் மூடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சப்புகஸ்கந்த அனல் மின் நிலையத்திலும் ஒரு நாளுக்கு மாத்திரமே எரிபொருள் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் மின் வெட்டு ஏற்படும் அபாயம் உள்ளதாகவும், மின்வெட்டுக்குச் செல்ல வேண்டிய நிலை வரலாம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## இந்தியாவிடமிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ள அரசு நடவடிக்கை

கொழும் பு, பெப். 15

இலங்கை மின்சார சபைக்கு நேரடியாக எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக இந்திய அரசாங்கம் மற்றும் ஐ. ஓ.சியுடன் இலங்கை மின்சார சபை இரு சுற்று பேச்சுவார்த்தையை முன்னெடுத்துள்ளதாக மின்சார சபையின் பேச்சாளரும் பிரதிப் பொது முகாமையாளருமான ஏ.ஆர்.நவமணி குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இந்த பேச்சுவார்த்தை நிறைவடைந்ததாலும் இந்தியாவின் முடிவுக்காக காத்திருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

இந்திய அரசாங்கம் இலங்கை மின்சார சபைக்கு எரிபொருளை வழங்க சம்மதம் வெளியிட்டால், இலங்கை மின்சார சபை அல்லது ஐ.ஓ.சி. மூலம் அதைச் செய்ய முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் இந்த கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

ஈழநாடு
Eelanadu
15.02.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மாசி 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

## சந்திரிகாவின் அறைகூவல்?

நாடு மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. ஆட்சி மாற்றம் ஒன்றின் மூலம்தான் இந்த நிலைமைகளை மாற்றியமைக்க முடியும். இதற்காக அனைத்து எதிரணியினரும் ஓரணியில் வரவேண்டுமென்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கின்றார். 2015 - ஆட்சி மாற்றத்தின்போது சந்திரிகா குமாரதுங்க காத்திரமான தலையீடுகளை செய்திருந்தார். சிதறிக்கிடந்த அனைத்து எதிரணிகளும் ஒன்றுதிரண்டன. இதில் சந்திரிகாவின் பங்கு முக்கியமானது. அதேபோன்று கொழும்பு மைய சிவில் சமூகங்களும் ஆட்சி மாற்றத்தின்போது, பிரதான பங்கு வகித்திருந்தன. கடந்த காலங்களில் தங்களுக்குள் முரண்பட்டிருந்த பலரும் ஓரணிக்கு வந்தனர்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக வரவேண்டுமென்பதில் ஆர்வமாக இருந்த போதும், அவருக்கான வெற்றி வாய்ப்பு தொடர்பில் சந்தேகங்கள் இருந்தமையால் - மஹிந்த அணியிலிருந்த மைத்திரிபால சிறிசேன வெளியில் இழுத்தெடுக்கப்பட்டு ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டார். 2005 தேர்தலில் ஏற்பட்டது போன்றதொரு நிலைமையே ஏற்பட்டது.

2005 தேர்தலில், தமிழ் மக்கள் தேர்தலில் பங்குகொள்ளாமையால், ரணிலின் நிலைமை - கைக்கு எட்டியது, வாய்க்கு எட்டாமல் போன கதையானது. 2015 தேர்தலிலும் கிட்டத்தட்ட அவ்வாறானதொரு அணுகுமுறை பிறிதொரு தந்திரோபாயத்துடன் கைக்கொள்ளப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கி, மைத்திரிபால அணியின் வாக்கு வங்கி, மற்றும் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்கு வங்கியும் ஓரிடத்தில் சங்கமித்தபோது, மஹிந்தவின் தோல்வி நிகழ்ந்தது. ஆனால், மைத்திரிபால சிறிசேன அணியினர் எதிர்பார்த்தது போல், மஹிந்தவின் வாக்கு வங்கியை பெருமளவுக்கு சரிக்க முடியவில்லை. இதுதான் பின்னர் பிரச்னையாகவும் மாறியது.

ஆட்சி மாற்றம் எதிர்பார்த்ததை விடவும் வேகமாக இறங்கு முகத்தை சந்தித்தது. ஏனெனில், ஆட்சி மாற்றத்திற்காக ஒன்றுபட்ட தரப்புக்கள், ஆட்சி மாற்றத்தை பாதுகாப்பதில் கரிசனையுடன் செயல்படவில்லை. ரணில் - மைத்திரி முரண்பாட்டின்போது பெரும்பாலானவர்கள் ரணில் சார்பு நிலையை எடுத்திருந்தனர். கூட்டமைப்பு உட்பட. பெரும்பாலானவர்கள் ரணில் சார்பை எடுத்தபோது, மைத்திரி மஹிந்த சார்பை நோக்கித் தள்ளப்பட்டார். மஹிந்தவை வீழ்த்தும் நோக்கில் மேற்கோள்ளப்பட்ட எதிரணிக்கூட்டின் ஆட்சி மாற்றமானது, இறுதியில், ராஜபக்ஷக்களை பலப்படுத்துவதில் முடிவுற்றது. ஈஸ்டர் தாக்குதல் பழம் நழுவி பாலில் விழுந்த கதையானது. ஈஸ்டர் தாக்குதலை தொடர்ந்து ராஜபக்ஷக்களின் மீளெழுச்சி உறுதியானது.

இந்த அனுபவங்களின் மத்தியில்தான் சந்திரிகா மீண்டுமோர் ஆட்சி மாற்றம் தொடர்பில் பேசுகின்றார். அவர் எவ்வாறான திட்டங்களை மனதில் கொண்டிருக்கின்றார் என்பதற்கு அப்பால், ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுன அரசாங்கம் முன்னைய செல்வாக்கோடு இல்லையென்பது உண்மைதான். ஆனால், ஆட்சியை, வேறு எவரேனும் பொறுப்பெடுத்தாலும்கூட, அவர்களால் நாட்டை வேகமாகப் பழைய நிலைக்கு கொண்டு செல்ல முடியுமா? ஏனெனில், அந்தளவுக்கு நாடு நெருக்கடிக்குள் இருக்கின்றது. ஆனால், புதிய ஆட்சியாளர்கள் சர்வதேச நாணய நிதியத்தோடு ஒத்துழைப்பதன் மூலம் நாட்டை மீட்டெடுக்கும் யோசனையோடு இருக்கலாம்.

2024 சவால்கள் மிக்கதாகவே இருக்கப் போகின்றது. இதனை உணர்ந்திருப்பதன் விளைவாகவே, ராஜபக்ஷக்கள் உள்ளூராட்சி தேர்தல் மூலம் தங்களின் வெற்றி வாய்ப்பை நாடிபிடிக்க முற்படுகின்றனர். உள்ளூராட்சி தேர்தல் இடம்பெற்றால் சிங்கள மக்களின் மனோநிலையை இலகுவாக நாடிபிடித்துவிடலாம் என்பதே அவர்களின் திட்டமாக இருக்கின்றது. ஆனாலும் ராஜபக்ஷக்களை வீழ்த்துவது இலகுவான விடயமாக இருக்கப்போவதில்லை.

# மூன்றாம் உலகப் போரின் விளிம்பில் ஐரோப்பா?

**அலசுவது இராஜதந்திரி**

*ஐக்கிய அமெரிக்கா தனது படைகளை கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் நோக்கி பெருமளவில் நகர்த்துவதற்கு தயாரகி வருகின்றது. இதற்கு காரணம் ரஷ்யா தனது படைகளை உக்ரைன் எல்லைப்புறம் நோக்கி நகர்த்த ஆரம்பித்துள்ளமையேயாகும்.*

*சோவியத் ரஷ்யா பதினைந்து மாநில வாரியான குடியரசுகளை உள்ளடக்கியதாக விளங்கியிருந்தது. 1922ஆம் ஆண்டில் லெனின் ரஷ்யப் புரட்சியை வெற்றிகரமாக நடத்தி முடித்ததன் விளைவாக 15 மாநில வாரியான குடியரசுகள் சோவியத் சோஷலிச குடியரசாக மலர்ந்தன (USSR). ஆனால், தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஷம் நிலைதளர ஆரம்பித்ததும் சோவியத் சோசலிசக் குடியரசிலிருந்த மாநில வாரியான குடியரசுகள் யாவும் தனிநாடுகளாக மாற்றமடைய ஆரம்பித்தன. அவற்றில் ஒன்றே இன்று ரஷ்யாவின் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள உக்ரைன் தேசம் என்பது குறிப்பிடத்தக்கது.*

*சோவியத் சோஷலிசக் குடியரசு ஆட்டங்கண்டதையடுத்து அதன் நேச நாடுகள் பலவற்றிலும் அரசியல் ரீதியான மாற்றங்கள் ஏற்படலாயின. சோவியத் யூனியன் பலமடைந்திருந்தபோது ஒன்றாக இருந்த நாடுகள் பல பிரிந்து சென்றன. அத்துடன் பிரிந்திருந்த நாடுகள் பல ஒன்றாகியிருந்தன.*

*இந்தப் பூகோள அரசியல் மாற்றங்களினால் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் வார்ஸோ உடன்படிக்கையின் அடிப்படையில் சோவியத் சோஷலிச ரஷ்யா சார்பாக இருந்த நாடுகள் பல தனி நாடுகளாயின. அதேசமயம் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் நேட்டோ ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒன்றிணைந்திருந்த அமெரிக்கா சார்பான நேசநாடுகள் மேலும் பலமடைய ஆரம்பித்தன. இதன் விளைவாக முன்பு இரு பெரும் வல்லரசுகள் என்ற வகையில் அமெரிக்காவுக்கு நிகராக இருந்த சோவியத் ரஷ்யா தனிஒரு நாடாக தனது மாநில வாரியான குடியரசுகள் பலவற்றையும் இழந்திருந்தது.*

*சோவியத் சோஷலிச ரஷ்ய குடியரசு நிலைதளர, அப்போது சோவியத் அதிபராக இருந்த மிக்கெயில் கோர்பச்சேவின் பெரஸ்தொய்க்கா சித்தாந்தமே முக்கிய காரணமாக இருந்தது. அத்துடன் இந்தச் சித்தாந்தமே ஏனைய சோவியத் மாநில குடியரசுகள் தனிநாடுகளாவதற்கும், கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட பூகோள அரசியல் மாற்றங்களுக்கும் முக்கிய காரணங்களாக அமைந்திருந்தன.*

*தற்போது ரஷ்ய அதிபராக இருக்கின்ற விளாடிமிர் புடின் அன்று சோவியத் சோஷலிசக் குடியரசின் புலனாய்வுத்துறையான கே. ஜி. பி. அமைப்பின் பொறுப்பாளராக இருந்தவர். இதன்காணமாக சோவியத் ரஷ்யாவின் உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்கள் குறித்த அனைத்து விடயங்களும் அவரின் நுனி விரல்களில் இருந்தன.*

*இதன்காரணமாக வெறுமனே ஒரு புலனாய்வுத்துறை தலைவராக இருப்பதை விட ஆட்டங்கண்டு நலிவுற்றிருந்த*



*ரஷ்யாவின் தலைவரானார் விளாடிமிர் புடின்.*

*தற்போது உக்ரைன் நெருக்கடிக்குக்கூட நேட்டோ அமைப்பால் அச்சுறுத்தல் அதிகரிக்குமோ என்பதே முக்கிய காரணமாக இருக்கின்றது. ஏனெனில், சோவியத் ரஷ்யாவிலிருந்து பிரிந்து சென்று தனிநாடாக உருவாகியிருக்கும் உக்ரைன் அமெரிக்கா சார்பான நேட்டோ அமைப்புடன் இணைந்துவிடுமோ என்ற காரணத்தாலேயே உக்ரைன்மீது பெரும் எடுப்பிலான படை எடுப்பொன்றை மேற்கொள்ள விளாடிமிர் புடின் தலைமையிலான ரஷ்யா ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றது. மறுபுறத்தே உக்ரைன் ரஷ்யா வசப்படுமானால் கிழக்கு ஐரோப்பாவில் அமெரிக்க சார்பு நேட்டோ அமைப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாமென அமெரிக்கா கருதுகின்றது.*

*இதன் காரணமாகவே ரஷ்யாவும் அமெரிக்காவும் கிழக்கு ஐரோப்பாவில் சந்நதம் கொள்ள ஆரம்பித்துள்ளன. இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் ரஷ்யா மேற்கொள்கின்ற பெரும் எடுப்பிலான படை நகர்வாகவே ரஷ்யாவின் உக்ரைனை நோக்கிய நகர்வுகள் காணப்படுகின்றன.*

*ஆகாயம் , கடல், தரை மார்க்கங்களில் ரஷ்ய படைகள் தமது பெரும் யுத்த சாதனங்கள் அனைத்தையும் உக்ரைன் நோக்கி நகர்த்த ஆரம்பித்துள்ளன. இதனையடுத்து அமெரிக்காவும் கிழக்கு ஐரோப்பாவில் உள்ள தனது படைகளையும் தன்னோடு இணைந்துள்ள நேச நாடுகளின் படைகளையும் உஷார் நிலையில் வைத்துள்ளது.*

*அமெரிக்கா, பிரிட்டன் , கனடா மற்றும் ஜேர்மனி நாடுகள் உக்ரைனில் உள்ள தமது நாட்டு மக்களை உடனடியாக தாயகம் திரும்புமாறு அழைப்பு விடுத்துள்ளன.*

*எனவே உக்ரைன் விவகாரம் தொடர்பாக ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே யுத்தம் மூளுமேயானால் ரஷ்யா தனத்துவிடப்பட்ட ஒரு நிலையிலேயே இருக்கும். இதே வேளை அமெரிக்க சார்பு நேட்டோ நாடுகளான பிரிட்டன் மற்றும் ஜேர்மனி உட்பட வேறுபல நாடுகள் ஒன்றிணைந்து ரஷ்யாவைத் தாக்க முடியும்.*

*இந்நிலையில் உக்ரைன் விவகாரம் முறுக்கேறி ஒரு மூன்றாம் உலக யுத்தமாக வெடித்து விடுமோ என்பதே ரஷ்ய - உக்ரைன் நிலவரத்தை அவதானிப்போர் கருதுவதை அறிய முடிகின்றது*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
பலவகைகளில் வருமானம் வரும். பிறருக்கு உதவு வீர்கள்.நியாயமான முறையில் சம்பாதிப்பீர்கள். பெரியோரின் ஆசி கிடைக்கும். குடும்பத்தில் உள்ள நபர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**இடபம்**
எந்தவொரு பிரச்னையும் வந்தவேகத்தில் காணா மல் போகும்.வாழ்க்கைத்துணைக்கு பதவி, சம்பள உயர்வு கிடைக்கும். சிலருக்கு அரசாங்கப் பணி கிடைக்கும். பணம் புழங்கும்.

**மிதுனம்**
கலைத்துறையில் ஈடுபாடு அதிகரிக்கும். நட்பு வட் டம் விரியும்.அரசுப்பணியாளர்கள் இன்று கவ னமாக இருக்க வேண்டும்.சுபநிகழ்ச்சி பற்றிய எண்ணங்கள் நிறைவேறும்.

**கடகம்**
வெற்றி சற்றே எட்டிப்போகும். மனம் தளர வேண்டாம். பணியாளர்களின் முயற்சி வெற்றி அளிக்கும். மகிழ்ச்சி கூடும். பயணங்கள் திட்ட மிட்டபடி முடிவதில் தடை இருக்கலாம்.

**சிம்மம்**
முயற்சியும், பயிற்சியும் இருப்பவர்களுக்கு வெற்றி கிடைக்கும். வீட்டில் உள்ள மூத்தவர்களின் ஆரோக்கியத்தில் கவனமாக இருங்கள். உங்களின் தொழில் ஆர்வம் வெற்றியை தேடி தரும்.

**கன்னி**
பொருளாதார உயர்வு ஏற்படப் பாடுபட்டு வெல்வீர் கள். மருத்துவ ஆலோசனை எடுத்துக் கொள்வது மிகவும் நல்லது. புதிய வாகனம் வாங்குவீர்கள். பணியாளர்களுக்கு ஒய்வு அதிகரிக்கும்.

**துலாம்**
எதிர்பாராத நன்மை கிடைக்கும். சேமிப்பில் ஆர் வம் கூடும். கைதட்டல் கிடைக்கும். பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**விருட்சிகம்**
பிரிந்த குடும்பங்களை ஒன்று சேர்த்து மகிழ்ச்சி அடைவீர்கள். சமூகத்தில் உங்களின் மதிப்பு உய ரும். குழந்தைகளால் மகிழ்வீர்கள்.விருது உங் களைத் தேடி வரும். மிகுந்த முயற்சியால் லாபம்.

**தனுசு**
பண விவகாரங்களில் நிதானமும், பொறுமையும் தேவை. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. சம்பளம் உயரும். வியாபாரத்தில் லாபம் சுமாராக வரும்.

**மகரம்**
சிறிய ஆரோக்கியப் பிரச்னை வந்து விலகும். தட்டிப் போய்கொண்டிருந்த விஷயம் இன்று இயல்பாய் முடியும். வெளிநாட்டில் வாழும் குழந்தைகள் நன்மை அடைவர்.

**கும்பம்**
அழகு சாதன பொருட்கள் வாங்குவீர்கள். கடன் தீரும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். மேடையில் பேசுவீர்கள். உங்களின் கவர்ச்சி அம்சம் கூடும். சோம்பலை உதறுங்கள்.

**மீனம்**
உங்களுக்கு பாராட்டும், கைதட்டலும் கிடைக்கும். நல்லதே நடக்கும். புதிய விஷயத்தை கற்பீர்கள். அன்பான சந்திப்பு நிகழும். நீங்கள் மதிக்கும் ஒரு வரால் சந்தோஷம் வரும். கலகலப்பான நாள்.

# தமிழக சட்டப்பேரவையையும் ஆளுநர் முடக்கும் ஆபத்தான நிலை ஏற்படும்!

## எச்சரிக்கிறார் எடப்பாடி பழனிசாமி

சேலம், பெப். 15

"மேற்கு வங்க சட்டப்பேரவையை ஆளுநர் முடக்கி வைத்துள்ளார். ஆளுங்கட்சியினர் தொடர் முறைகேட்டில் ஈடுபட்டால் அதேநிலை எதிர்காலத்தில் தமிழகத்துக்கு ஏற்படும்." என அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர்களை ஆதரித்து சேலம் மாவட்டத்தில் பழனிசாமி பேசியதாவது:

"தன்னாட்சி பெற்ற தேர்தல் ஆணையம் நடுநிலையோடு செயல்பட வேண்டும்.



ஆளுங்கட்சியின் கைப்பாவையாக தேர்தல் ஆணையம் செயல்படுகிறது. அதனால்தான் ஆளுநரிடம் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மனு அளித்துள்ளனர். தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் ஆளுங்கட்சிக்கு சாதகமாக செயல்பட்டால் உயர் நீதிமன்ற தீர்ப்புப்படி நடவடிக்கை எடுக்கப்படும். அ.தி.மு.கவை எதிர்க்க தெம்பும் திராணியும் தி.மு. கவுக்கு இல்லை.

திமுக தலைவர் ஸ்டாலின் ஏன் மக்களிடம் வாக்கு கேட்க நேரடியாக வரவில்லை. மக்களை சந்திக்கதெம்பு இன்றி, முறைகேட்டில் ஈடுபட்டு வெற்றி பெற திமுக-வினர் முயற்சி செய்கின்றனர். முறைகேடு இன்றி நேர்வழியில் திமுக வெற்றி பெற்றதாக சரித்திரமில்லை. மேற்கு வங்க சட்டப்பேரவையை ஆளுநர் முடக்கி வைத்துள்ளார். ஆளுங்கட்சியினர் தொடர் முறைகேட்டில் ஈடுபட்டால் அதே நிலை எதிர்காலத்தில் தமிழகத்திலும் ஏற்படும்."

# மேற்கு வங்க சட்டமன்றம் முடக்கம் முதலமைச்சர் ஸ்டாலின் கண்டனம்

சென்னை, பெப். 15

மேற்கு வங்கத்தில் சட்டமன்ற திகதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்து ஆளுநரின் செயலுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தில் சட்டமன்ற திகதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்து ஆளுநர் ஜகதீப் தன்கார் நேற்று முன்தினம் அறிவித்தார்.

இதனை தொடர்ந்து அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் அரசமைப்புச் சட்டத்தின் 172-2 ஏ பிரிவு வழங்கியுள்ள அதிகாரத்தின் அடிப்படையில்



மாநில சட்டப்பேரவையை திகதி குறிப்பிடாமல் ஒத்தி வைப்பதாகவும், நேற்று முன் தினம் முதல் இது அமலுக்கு வருவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் சட்டமன்ற முடக்கிய ஆளுநரின் செயலுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார். அந்த பதிவில், "மேற்கு வங்க சட்டமன்றத்தை ஆளுநர் முடக்கிய செயல், விதிமுறைகள் மற்றும் மரபுகளுக்கு எதிரானது. அரசியலமைப்புச் சட்டத்தை நிலைநிறுத்த மாநிலத்தின் தலைவர் முன்மாதிரியாக இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் பரஸ்பர மரியாதை கொடுப்பதில்தான் ஜனநாயகத்தின் அழகு இருக்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

## ஒரே நாடு, ஒரே தேர்தலை அனுமதிக்கக்கூடாது

### சீமான் கருத்து

சென்னை, பெப். 15

"ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது பைத்தியக்காரத்தனம். அதை நிறைவேற்ற அனுமதிக்கக் கூடாது" என்று, நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பா ளர் சீமான் கூறினார்.



திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடும்நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டம் பாளையங்கோட்டையில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்டசீமான் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:

"ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒரே கல்வி என்பது பைத்தியக்காரத்தனம். அதை நிறைவேற்ற அனுமதிக்கக் கூடாது. வாக்கு இயந்திரத்தையும், வீதி வீதியாகச் சென்று பரப்புரை செய்வதையும் ஒழிக்க வேண்டும். ஒரே மேடையில் அனைவருக்கும் வாய்ப்பளித்து பேச வைக்க வேண்டும். நானும் தமிழன் என்று கூறி ராகுல் காந்தி தமிழர்கள் மீது பற்று இருப்பதுபோல் காட்டுகிறார். அவர்களுக்கு தமிழ் இனத்தின் மீது எந்த பற்றும் இல்லை.

அதிகாரத்தில் இருப்பவர்கள்தான் வெற்றி பெறுவார்கள் என்பதுஏற்புடையது அல்ல. மாற்று தேடும்மக்களுக்கு நாங்கள் ஒரு வாய்ப்பாக இருக்கிறோம்"" என்றார்.

## அ.தி.மு.கவுக்கு வாக்களிப்பது பா.ஜ.கவுக்கு அளிப்பதற்கு சமம்

### சுப.வீரபாண்டியன்

சென்னை, பெப். 15

தேர்தலில் பாஜகவுக்கு போட்டியிட ஆளில்லாததால், சில இடங்களில் மட்டுமே போட்டியிடுகின்றனர். அவர்களுக்கும் அ.தி.மு.கவினரே உதவி செய்கின்றனர். எனவே, அ.தி.மு.கவுக்கு அளிக்கும் வாக்கு என்பது, பா.ஜ.கவுக்கு அளிக்கும் வாக்குதான் என திராவிடர் இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் தெரிவித்தார்.



திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி நகராட்சியில் போட்டியிடும் திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து, சுப.வீரபாண்டியன் நேற்று உரையாற்றினார். அப்போது, அவர் தெரிவித்ததாவது:

"அ.தி.மு.கவுக்கு அளிக்கும் வாக்கு என்பது, பாஜகவுக்கு அளிக்கும் வாக்குதான். அ.தி.மு.கவுக்கு வாக்களிப்பது மதக்கலவரத்தை தூண்ட ஆதரவளிப்பதற்கு சமம். தமிழகத்துக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டு செயலாற்றி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலினின் நற்பணிகள் தொடர திமுகவுக்கு வாக்களிக்க வேண்டும்" என்றார்.

கூட்டத்தில், மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையாமங்கலம் பாலு, மன்னார்குடி நகர தி.மு.க. செயலாளர் வீரா.கணேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் பாலச்சந்திரன் தி.மு.க. கூட்டணி வேட்பாளர்கள் கலந்துகொண்டனர்.

# ஆட்சி மாற்றத்துக்கு தயாராக இருங்கள்!

ராதா அறைகூவல்

கொழும்பு, பெப். 15

"இந்த ஆட்சி தொடரும் வரை நாட்டில் பிரச்னைகளும் தொடரும். எனவே, ஆட்சி மாற்றத்துக்கு மக்கள் தயாராக வேண்டும்." - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டு மக்கள் தற்போது சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துவருகின்றனர். இதற்கு கொரோனா காரணம் அல்ல. ஏனெனில் எமது நாட்டில் மட்டும் கொரோனா பரவவில்லை. கொரோனாவால் பெரிதும் பாதிக்கப்பட்ட அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் பொருளாதாரம் மேம்பட்டுள்ளது. ஊழல் ஆட்சி மற்றும் முறையற்ற முகாமைத்துவம் காரணமாகவே எமது நாடு முன்னேறாமல் உள்ளது.

குறிப்பாக சேதனை பசளையை நோக்கி நகரும் முடிவு ஓரிரவில் எடுக்கப்பட்டதாகும். இவ்வாறான முடிவுகள் நீண்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டு முறையாக எடுத்திருக்க வேண்டும். ஆனால் இங்கு என்ன நடந்தது? உலக சந்தையில் உர விலை குறைந்திருந்த சமயம், உர இறக்குமதிக்கு தடை செய்யப்பட்டது. தற்போது விலை அதிகரித்துள்ளது. இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கம்பனிகள் இலாபம் அடைந்துள்ளன.

கொரோனா பெருந்தொற்று காலத்திலும் எமது தோட்ட மக்கள் தொழிலுக்குச்சென்றனர். பொருளாதாரத்துக்கு பங்களிப்புச்செய்தனர். ஆனால் பட்ஜெட்டிலோ, ஜனாதிபதியின் சிம்மாசன உரையிலோ எமது மக்களுக்கு எந்த அறிவிப்பும் விடுக்கப்படவில்லை. மானிய நிலையில் கோதுமை மாவ வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. தற்போது அதுவும் இல்லை.

இந்த அரசு தொடரும்வரை துன்பமும் தொடரும். இன்று ஈபிஎவ், ஈடிஎவ்பில் கை வைத்துள்ளனர். எனவே, மக்கள் இந்த அரசை விரட்டியடிக்க தயாராக வேண்டும். அப்போதுதான் நாட்டுக்கு விடிவு பிறக்கும்-என்றார். (அ)

# ஊடகவியலாளர் சமுதித்த வீடு மீது வெள்ளை வானில் வந்தவர்கள் சூடு!

## நேற்று அதிகாலையில் சம்பவம்

கொழும்பு, பெப். 15

**பிலியந்தலையில் உள்ள ஊடகியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டுக்கு நேற்று அதிகாலை வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகள் அவரது வீட்டை நோக்கிச் சரமாரி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.**

துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன், வீட்டின் ஜன்னல்களை ஆயுததாரிகள் அடித்து நொருக்கியதாக ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரம தெரிவித்தார்.

எனினும் துப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதல்களில் சமுதித்த சமரவிக்ரம உள்ளிட்ட எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முறையிடப்பட்டது. இதையடுத்து வீட்டுக்கு வந்த பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர். அத்துடன், வீட்டில் இருந்த இரகசியக் கண்காணிப்பு கமெரா பதிவுகளையும் பெற்று பொலிஸார் தாக்குதலாளிகள் தேடி வருகின்றனர்.

நான்கு பேர் கொண்ட குழுவொன்று வெள்ளை வானில் வந்து வீட்டு வாசலில் பாதுகாப்பு கடமையில் இருந்த பாதுகாப்பு அதிகாரியின் தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்திய பின்னர் ஊடகவியலாளரின் வீட்டுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியதாக சம்பவத்தை நேரில் பார்த்தோர் தெரிவித்தனர்.



ஊடகவியலாளரும் விமர்சகருமான சமுதித்த சமரவிக்ரம, தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றை தொகுத்து வழங்குகிறார். இதில் அரசியல்வாதிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களை அவர் பேட்டி கண்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (அ)

# லிந்துலை விருந்தகமொன்றில் தீ வயோதிபர் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 15

லிந்துலையில் உள்ள விருந்தகம் ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விருந்தகத்தின் சமயலறையில் அவர், பணியாற்றிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அவரது ஆடையில் தீப்பற்றியதால் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர், லிந்துலை - லெமலியர் தோட்டத்தைச் சேர்ந்த 72 வயதான ஒருவரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் லிந்துலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மஸ்கெலியாவில் மண் திட்டு சரிந்து மூவர் வைத்தியசாலையில் அனுமதி!

கொழும்பு, பெப். 15

பாரிய மண்திட்டு சரிந்து வீழ்ந்து வீடு ஒன்று முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் அதில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 03 பேர் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஸ்கெலியா காட்மோர் கிங்கொரோ பிரிவில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றது.

வீட்டின் பின்பக்கமாக இருந்த மண்திட்டே இவ்வாறு சரிந்து வீழ்ந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்து மூன்று பேரில் தாயும் மகளும் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந்த அனர்த்தத்தில் இரண்டு வயது குழந்தை ஒன்றும் 32 வயது தாய் ஒருவரும், 65 வயது ஆண் ஒருவருமே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

சம்பவத்தில் வீட்டில் இருந்த உடைமைகளுக்கும் சேதம் ஏற்பட்டன.சம்பவம் தொடர்பான விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# இரண்டு வாரங்களுக்குள் இந்தியா பறக்கிறார் பஸில்

கொழும்பு, பெப். 15

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இன்னும் இரு வாரங்களுக்குள் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

கடன் தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காகவே அவர் டில்லி செல்கின்றார்.

"இலங்கை சிறந்த வெளிநாட்டு கொள்கையை பின்பற்றுகின்றது. அதனால்தான் நெருக்கடியான கட்டத்தில் நாம் தனிமைப்படுத்தப்படவில்லை. எமக்கு உதவிகள் கிட்டுகின்றன. அந்தவகையிலேயே இந்தியாவில் இருந்தும் கடன் கிடைக்கின்றது." - என்றும் பீரிஸ் குறிப்பிட்டார். (அ)

# காணி அமைச்சின் நடமாடும் சேவை வவுனியாவில் 27 ஆம் திகதி நடக்கும்

வவுனியா, பெப். 15

வன்னியின் மூன்று மாவட்டங்களிலும் காணப்படும் காணி பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கான காணி அமைச்சின் நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கே.காதர் மஸ்தானின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தான் வன்னியின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காணப்படும் பல்வேறுபட்ட காணி தொடர்பான பிரச்னைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன், அவற்றுக்கு விரைவான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அதன் அடிப்படையில் ஜனாதிபதி காணி அமைச்சருக்கு வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக, பாராளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தானுடன் கலந்துரையாடிய அமைச்சர் எஸ். எம். சந்திரசேன, வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய நடமாடும் சேவை ஒன்றை வவுனியாவில் இம்மாதம் 27 ஆம் திகதி நடத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு பணித்துள்ளார். இதன் போது வன, வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களங்கள் என்பவற்றின் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே வன்னி மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு காணி தொடர்பான பிரச்னைகளுக்கு இதன்போது தீர்வு காணப்படும்-என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தொழிற்சங்கங்களுக்கு எதிரான அடக்குமுறைகள் ஐரோப்பிய ஒன்றியத்திடம் முறையிட நடவடிக்கை

கொழும்பு, பெப். 15

நீதிமன்ற தடையுத்தரவுகளை பெறுவதன் மூலம் தொழிற்சங்கங்களுக்கு எதிரான அடக்குமுறைகள் தொடர்பில் சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் முறையிடவுள்ளதாக சுகாதார தொழிற்சங்க சம்மேளனத்தின் இணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கங்களை கொழும்புக்கு அழைத்து மகாசபையை கூட்டுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வேதனம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து 17 சுகாதார சேவை தொழிற்சங்கங்களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பணிப்புறக்கணிப்பு தொடர்கிறது.

நேற்றுமுன்தினம் நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, பணிப்புறக்கணிப்பில் ஆரம்பத்தில் ஈடுபட்டிருந்த அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கம் இந்த பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் இருந்து விலகியிருந்தது.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் இருந்து தற்காலிகமாக விலகுவதாக அதன் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்திருந்தார். (அ)

# ஆட்சி மாற்றமே உடனடி தேவை

## வலியுறுத்துகின்றார் சந்திரிகா

கொழும்பு, பெப். 15

**இலங்கையின் இன்றைய நிலைமை மிகவும் மோசமான கட்டத்தில் உள்ளது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.**

ஆட்சி மாற்றமே தற்போதைய உடனடித் தேவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் அனைவரும் பொறுமை இழந்துள்ளனர் எனவும், நாட்டில் அடுத்து என்ன நடக்கும் என்று தன்னால் கூற முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய ஆட்சியால் நாடு சீரழிந்துள்ளது என்றும் நாடு மீண்டு எழ முடியாத நிலையில் நாட்டின் பொருளாதாரம்



அதாள பாதாளத்தில் சென்றுள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

ஆட்சி மாற்றமே தற்போதைய உடனடித் தேவை என குறிப்பிட்ட சந்திரிகா குமாரதுங்க, ஜனநாயகத்தை நேசிக்கும் பிரதிநிதிகள் ஓரணியில் திரளவேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

அவ்வாறு இணையாவிட்டால் உலக வரைபடத்தில் இலங்கை இல்லாமல் போகும் நிலைமைதான் ஏற்படும் என்றும் சந்திரிகா குமாரதுங்க எச்சரித்தார். (அ)

## திருமலை எண்ணெய் குதங்கள் ஆய்வை மேற்கொள்ள முடிவு

கொழும்பு, பெப். 15

திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பாக ஆய்வை மேற்கொள்ள திருகோணமலை பெற்றோலியம் ரேர்மினல் லிமிடெட் தீர்மானித்துள்ளது.

குறித்த ஆய்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் வணிகத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

திருகோணமலை பெற்றோலியம் ரேர்மினல் லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை, மூன்று முறை கூடி இது தொடர்பாக கலந்துரையாடியது என அமைச்சர் கூறினார்.

திருகோணமலை துறைமுகத்தை அண்மித்து காணப்படும் எண்ணெய் குத வளாகத்தை அபிவிருத்தி செய்வதற்கு குறித்த பெற்றோலியம் ரேர்மினல் லிமிடெட் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஐஸ் போதைப்பொருளுடன் மன்னாரில் ஐந்து பேர் கைது!

மன்னார், பெப். 15

மன்னார் பகுதியில் 20 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னாரில் விசேட அதிரடிப்படையினர் குழுவினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

20 மில்லியன் ரூபா பெறுமதியான ஒரு கிலோ 200 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நீண்டகாலமாக சர்வதேச கடல் எல்லையை மீறியவர்கள் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் 33 மற்றும் 45 வயதுடையவர்கள் என்றும் பேசாலை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்றும் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது. (அ)

## பேஸ்புக் விருந்தில் கலந்துகொண்ட 38 பேர் கைது!

கொழும்பு, பெப். 15

கண்டி நகரில் பேஸ்புக் விருந்தில் பங்குகொண்ட 38 இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேஸ்புக் அழைப்பு மூலம் இவர்கள் மேற்படி விருந்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வசமிருந்து ஐஸ் போதைப் பொருள் மற்றும் போதை மாத்திரைகள் என்பவற்றையும் கண்டிப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மேற்படி விருந்துக்கு வருகை தந்தவர்கள் கண்டியைச் சூழ உள்ள பிரபல வர்த்தகர்களின் பிள்ளைகள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் சொகுசு வாகனங் களில் வந்தே மேற்படி விருந்தில் கலந்து கொண்டதாக பொலிஸார் மேலும் கூறினர். இதில் 21 முதல் 24 வயது டைய நான்கு யுவதிகளும் உள் ளடங்குவதாகத் தெரிய வருகிறது. சந்தேக நபர்களை கண்டி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## 31,600 மெற்றிக் தொன் நெல் இதுவரையில் கொள்வனவு

கொழும்பு, பெப். 15

இந்த அறுவடைப் பருவத்தில் இதுவரை 31,600 மெட்ரிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, அனுராதபுரம் உள்ளிட்ட பல பிரதேசங்களில் இருந்து நெல் கொள்வனவு செய்யப்பட்டதாக சபையின் தலைவர் நீல் டி அல்விஸ் தெரிவித்தார்.

ஒரு கிலோகிராம் நாட்டு நெல் 90 ரூபாவுக்கும், சம்பா நெல் ஒரு கிலோகிராம் 92 ரூபாவுக்கும், கீரி சம்பா 95 ரூபாவுக்கும் கொள்முதல் செய்யப்படுவதாக டி அல்விஸ் குறிப்பிட்டார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் கிளைகளுக்கு நெல் கொண்டு வரப்பட்டால் ஒரு கிலோகிராமுக்கு 2 ரூபா மேலதிகமாக வழங்கப்படும் என நீல் டி அல்விஸ் தெரிவித்தார்.

அதன்படி ஒரு கிலோ நாட்டு நெல் 92 ரூபாவுக்கும், ஒரு கிலோ சம்பா நெல் 94 ரூபாவுக்கும், கீரி சம்பா 97 ரூபாவுக்கும் கொள்முதல் செய்யப்படும் என்று அவர் கூறினார். (அ)

## சிமெந்து தட்டுப்பாடு முடிவுக்கு வந்துள்ளது

### அமைச்சர் ரோஹித தெரிவிப்பு

கொழும்பு, பெப். 15

தற்போது சந்தையில் சிமெந்துக்கான தட்டுப்பாடு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அதேபோன்று, கோதுமைமா போன்ற பொருட்களுக்கான தட்டுப்பாடு விரைவில் நீக்கப்படும் என்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபயகுணவர்த்தன தெரிவித்தார்.

தற்போது துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசியப் பொருட்களை தாமதக்கட்டணம் இன்றி விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சர்



கூறினார்.

பண்டிகைக் காலத்தில் பொருட்களை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கு சகல நடவடிக்கைகளுமே மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## இலங்கையர்களின் உணவு பழக்கத்தில் திடீரென்று மாற்றம்!

### கவலை வெளியிட்டது உலக உணவு விவசாய அமைப்பு

கொழும்பு, பெப். 15

பிரதான உணவு வகைகளின் சடுதியான விலை அதிகரிப்பு காரணமாக இலங்கையர்களின் உணவு பழக்கவழக்கத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் குறித்த அமைப்பின் உலகளாவிய தகவல் மற்றும் முன்னெச்சரிக்கை தொடர்பான அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தானியங்கள் மற்றும் ஏனைய பிரதான இறக்குமதி உணவுகளின் விலைகள் கடந்த செப்ரெம்பர் முதல் அதிகரித்த துடன், இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் அதியுட்ச விலை அதிகரிப்பை எட்டியுள்ளது.

டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் வீழ்ச்சி இதற்கான பிரதான காரணியாகும்.

இவ்வாறான விலை அதிகரிப்பு காரணமாக குறைந்த வருமானம் உடைய குடும்பங்களுக்கு உணவு கிடைப்பதில் பாரிய எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறித்த குடும்பங்கள் உணவு நுகர்வை குறைத்துள்ளதுடன், போசனை குறைந்த உணவினை நாடி வருகின்றனர்.

இது அவர்களது உணவு பாதுகாப்பு, உடல் நலம் மற்றும் போசனை ஆகியவற்றில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதாக உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## வேலைநிறுத்தத்துக்கு இது பொருத்தமான நேரமல்ல!

### ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 15

தற்போது பொதுமக்கள் எதிர்நோக்கும் சுமைகளுக்கு மத்தியில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கான நேரம் பொருத்தமானதல்ல என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜே.வி.பியின் அரசியல் பீட உறுப்பினர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த, தொடர்ந்தும் சேவையாற்றும் நிலையில் தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபடுவதே பொருத்தமானதாகும் என்று கூறினார்.

வேலைநிறுத்த நடவடிக்கையின் விளைவாக அரசாங்கத்துக்கு சாதகமான சூழ்நிலை உருவாகும் என்றும் லால்காந்த கூறினார்.

கடுமையான சுமைகளுக்கு உள்ளாகி, அரசாங்கத்தை குற்றம்சாட்டும் மக்கள் மருத்துவமனைகளில் சேவைகளை பெற முடியாவிட்டால், அதற்குப் பதிலாக வேலைநிறுத்த நடவடிக்கையைக் குறை கூறத் தொடங்குவார்கள் என்று அவர் கூறினார்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள சுகாதார நிபுணர்களை மக்கள் குற்றம் சுமத்துவார்கள் என்றும் பிரச்னைகளை தீர்க்க அரசாங்கம் தவறியதாக கூறமாட்டார்கள் என்றும் லால்காந்த குறிப்பிட்டார்.

மக்கள் சுகாதார நிபுணர்களை குறை கூறும்போது, ஆட்சியாளர்கள் மக்களுக்காக இருப்பார்கள், அவர்களின் மீட்பர்களாக மாறுவார்கள் என்றும் அவர் கூறினார். (அ)

# நிரந்தர அதிகாரப் பகிர்வு பொறிமுறையை நடைமுறைப்படுத்த இலங்கை தவறிவிட்டது

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால கருத்து



கொழும்பு, பெப். 15

**இலங்கையில் யுத்தம் நிறைவுக்கு வந்து 12 வருடங்கள் கடந்துள்ளபோதும் அதிகார பகிர்வுக்கான நிலையான பொறிமுறை உருவாக்கப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

தென்கொரியாவில் கடந்த வாரம் இடம்பெற்ற சமாதானம் தொடர்பிலான மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மைத்திரிபால சிறிசேன இதனை கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

யுத்தம் முடிவுக்கு வந்ததை தொடர்ந்து அமைதி, சமாதானம், நல்லிணக்கம், ஜனநாயகம் ஆகியவற்றை உறுதிப்படுத்த பான் கி மூன் முன்னேற்றகரமான தீர்மானங்களை முன்னெடுத்தார்.

இருப்பினும் சர்வதேசம் எதிர்பார்க்கும் தேசிய நல்லிணக்கப் பொறிமுறைகள் எதிர்பார்த்த பலனைப் பெறவில்லை.

தற்போது 12 வருடம் கடந்துள்ள நிலையில் இன்றும் நிலையான அதிகார பகிர்வுக்கான பொறிமுறை வகுக்கப்படவில்லை-என்றார். (அ)

# காலி கோட்டையில் பீரங்கிகள் சேதம்!

கொழும்பு, பெப். 15

காலி கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள பீரங்கிகள் வைக்கப்பட்டிருந்த பாதுகாக்கப்பட்ட பகுதியில் பீரங்கிகள் சில சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சில பீரங்கிகள் நொருக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் சில பீரங்கிகளின் பாகங்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும் அதன் திட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுற்றுலாப் பயணிகள் சிலர் காலி கோட்டைக்கு வருகை தந்து குறித்த பீரங்கிகளின் மேல் ஏறி, புகைப்படங்கள் எடுக்க முற்பட்டதன் கார ணமாக இந்த பீரங்கிகள் சேத மாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.(அ)

# இணையவசதி துண்டிக்கப்படும்?

கொழும்பு, பெப். 15

இந்து சமுத்திரத்தில் கடலுக்கு அடியில் காணப்படும், இணையத்தள வசதியை வழங்கும் சர்வதேச நீர்மூழ்கி கேபிள் (submarine cable) கட்டமைப்பில் கோளாறு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சர்வதேச நீர்மூழ்கிக் கேபிள் அமைப்பானது உலகின் பல்வேறு நாடுகளுக்கு தேவையான இணைய வசதிகளை இணைக்கிறது.

வங்காள விரிகுடாவை அண்டிய கடற்பகுதியில் ஆழ்கடலில் பதிக்கப்பட்டுள்ள இந்த நீர்மூழ்கி வடத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, அவ்வப்போது கைபேசி மற்றும் அகன்ற அலைவரிசை (புரோட்பாண்ட்) இணைய இணைப்புகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் என கைபேசி சேவை வழங்குநர் நிறுவனமொன்று அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், குறித்த தொழிநுட்பக் கோளாறை சீர்செய்வதற்கு எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதை மதிப்பிட முடியாது எனவும் அந்நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

குறித்த சர்வதேச நீர்மூழ்கிக் கேபிளானது சிங்கப்பூரில் இருந்து மலேசியாவின் பென்னாங், இலங்கை, சென்னை மற்றும் மும்பை மற்றும் ஓமானின் பர்கா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் புஜைரா ஆகிய மத்திய நிலையங்கள் ஊடாக இணைய சேவைகளுக்கான இணைப்பு வசதிகளை வழங்குகிறது. (அ)

# மலையக மக்களின் அபிலாஷைகளை உள்ளடக்கி பல்வேறு தரப்புக்கு கடிதம்

கொழும்பு, பெப். 15

மலையக மக்களின் அபிலாஷைகளை உள்ளடக்கி பல்வேறு தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ள கடிதம் இந்த மாதம் 22 ஆம் திகதி இறுதி செய்யப்படவுள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையில் இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பில் சந்தித்து, இந்த கடிதத்தை இறுதி செய்யும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மனோ கணேசன் தெரிவித்தார். (அ)

### ஊடகர் சமுதித்த வீடு மீது தாக்குதல்

# விசாரணை கோரும் ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, பெப். 15

அரசு ஊடக அடக்குமுறையை ஆரம்பித்துவிட்டதா என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி இன்று எழுப்பியுள்ளது.

அத்துடன், ஊடகவியலாளர் சமுதித்தவை இலக்கு வைத்து, அவரின் வீடு மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கருத்து சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என குறிப்பிட்ட அவர், ஊடக அடக்குமுறையை அரசு கைவிட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அதேவேளை, ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மீது மேற்கொள்ளப்பட்ட முட்டை தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் மறைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# கைத்தொலைபேசி வழங்க மறுத்த தாய் உயிரை மாய்த்துக்கொண்ட மாணவன்!

கொழும்பு, பெப். 15

12 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவன் தனது தாய் கைத்தொலைபேசியைக் கொடுக்க மறுத்ததால் தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவமொன்று அனுராதபுரம் தஹயியாகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் அனுராதபுரம் புனித சூசையப்பர் கல்லூரியின் ஏழாம் தர மாணவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கைத்தொலைபேசியில் “கேம்” விளையாடும் பழக்கம் கொண்ட குறித்த மாணவன் கடந்த 11ஆம் திகதி பாடசாலையைத் தவறவிட்டதால் அவரது தாயார் சிறுவனைத் திட்டிவிட்டு, கைத்தொலை பேசியை பறித்துச் சென்றுள்ளார்.

இதனால் கோபமடைந்த சிறுவன் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இணையம் ஊடாக கற்றலின்போது தாயாரின் கைத்தொலைபேசியை பயன்படுத்திய குறித்த மாணவன் “கேம்” விளையாட்டில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது. சிறுவனின் தாயார் அர சாங்க நிறுவனத்தில் எழுது வினைஞராகவும் தந்தையார் தனியார் பஸ் நிறுவன ஊழியராகவும் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உயர்தரத்துக்கு தகுதி பெறாத மாணவருக்கு தொழில்வாய்ப்பு

கொழும்பு, பெப். 15

2020ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தகுதி பெறாத மாணவர்களை தொழிற்பயிற்சிக்கு உட்படுத்தி அவர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்கும் நடைமுறை ஒன்றை வகுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தினால் இந்த வேலைத்திட்டம், திட்டமிடப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் சுமார் 98,000 மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தகுதி பெறவில்லை. இவர்களுள், கணிதப் பாடத்தில் சித்தியடையாத, ஆனால் பின்னர் அதன் பெறுபேற்றை பெற்றுத் தருவதாகக் கூறி க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களைத் தவிர ஏனைய மாணவர்கள் அனைவரும் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்படுவர்.

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தகைமை பெறாத மாணவர்கள் பிரதேச செயலக மட்டத்தில் இனங்காணப்பட்டு அவர்களின் திறன்கள் மற்றும் ஆர்வங்களுக்கு ஏற்ப தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் மேலும் கூறியுள்ளது.

(அ)

# புதிய பயங்கரவாதச் சட்டம் சபையில் விரைவில் விவாதம்

கொழும்பு, பெப். 15

பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்துவதற்கான புதிய சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனவே, இச்சட்டமூலம் வெகுவிரைவில் சபையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்ட திருத்தத்தை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கடந்த 11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் ஒரு சந்தேக நபரை தடுத்து வைக்கும் காலம் 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இந்தத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர் பாதுகாப்பாக இருக்கின்றாரா? என்பதை உறுதி செய்வதற்காக நீதிமன்ற நீதவான் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்துக்கு செல்லவும் புதிய திருத்தச் சட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்துக்கு சட்டத்தரணி ஒருவர் செல்லவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர் தமது உறவினர்களுடன் பேசுவதற்கும் புதிய திருத்தத்தில் வழி செய்யப்பட்டுள்ளது.

இந்த திருத்தங்களின் மூலம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படப்போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# 13ஆவது திருத்தமும் தமிழ் அரசியல் சமூகமும்

## ஒரு யதார்த்த அணுகுமுறை -1

இன்றைய தமிழ் அரசியல் பரப்பில் முக்கிய பேசுபொருளாக மாறியுள்ள விவகாரம் இலங்கை அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தம் பயனுள்ளதா, பயனற்றதா என்பதும், அதன் விளைவாக ஏற்படுத்தப்பட்ட மாகாணசபை அரசு முறைமை உண்மையிலேயே தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் தன்மையை கொண்டதா, இல்லையேல் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் அடையக்கூடிய கணிசமான அதிகார பகிர்வை தடுத்து நிறுத்தும் ஒரு பயனற்ற நிறுவனமாக இருக்கின்றதா? என்பதுமாகும்.

இந்த விவாதம் முன்னரங்கிற்கு கொண்டுவரப்பட்டதின் முக்கிய காரணம், தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட பல தமிழ் அரசியல் கட்சிகள் அண்மையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கைக்கான இந்திய தூதுவருக்கூடாக அனுப்பிய கடிதமொன்றில், 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் படுத்துவதற்கு இலங்கை அரசை இந்திய அரசு உரிய முறையில் ஊக்குவிக்க வேண்டும் என்று கோரியிருந்ததுடன், இந்த 13ஆவது திருத்தமானது 1987இல் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே கொண்டுவரப்பட்டது என்பதையும் அதில் சுட்டிக்காட்டி இருந்தனர்.

இந்த விவகாரம், 13ஆவது திருத்தத்தை எதிர்ப்பவர்கள் மத்தியிலிருந்து எதிர்ப்பு ஆர்பாட்டங்களை தூண்டிவிடவும் காரணமாய் அமைந்துவிட்டது. கோட்டாபய அரசு புதிய அரசியல் யாப்பொன்றை தயாரிப்பதற்காக நிபுணர்கள் குழு ஒன்றை அமைத்து, அக்குழு மிக விரைவில் புதிய நகல் அரசியல் யாப்பொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருப்பதாக செய்திகள் வெளிவரும் இவ்வேளையில், இந்த வாதப்பிரதிவாதங்கள் மேலும் அதி முக்கியத்துவம் பெறுகின்றன என்று கூறலாம்.

13ஆவது பற்றிய வாதப்பிரதிவாதங்களின் சரியான நியாயங்களை தீர்மானிப்பதற்கு 13ஆவது திருத்தத்தில் கூறப்பட்டிருக்கும் சாராம்சங்களையும், 1988இலிருந்து வடக்கு கிழக்கு தவிர்ந்த இலங்கை முழுவதும் 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டு, தொடர்ச்சியாக நடைமுறையில் இருந்த மாகாண அரசுகளின் செயற்பாடுகள் பற்றியும் பார்ப்பது முக்கியமாகும்.

இந்த மாகாண அரசு முறைமை வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களின் நீண்ட கால கோரிக்கையான சமஸ்டி அடிப்படையிலான அதிகார பரவலாகத்தின் விளைவாகவே ஏற்பட்டது என்பதுடன், ஆரம்பத்தில் இது வடக்கு கிழக்கு இணைந்த மாகாணத்திற்கு மாத்திரமே அமைக்கப்படும் என்று கருதப்பட்ட போதிலும், இந்த முறைமை சிங்கள மக்களை பெரும்பான்மையாகக்கொண்ட இலங்கையின் ஏனைய பாகங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. அப்போது, இந்த மாகாணங்களில் மாகாண அரசுக்கான கோரிக்கை எழவில்லை என்பதும் குறிப்பிடப்படவேண்டியது.

முதலாவது மாகாணசபை தேர்தல்கள் ஏப்ரல் 1988இல் வட மத்திய, வட மேற்கு, சப்ரகமுவ மாகாணங்களுக்கும் பின்னர் ஏனைய மாகாணங்களுக்கும் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து, இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் செப்ரெம்பர் 1988இல் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரே நிர்வாக அலகாக இணைக்கப்பட்டு, நவம்பர் 1988இல் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான தேர்தல் நடைபெற்றது. பின்னர் 1990இல் வடக்கு கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டது. இதன் பின்னர், இணைந்த வடக்கு கிழக்கு மாகாணம் மத்திய அரசினால் நேரடியாக நிர்வகிக்கப்பட்டது. தொடர்ந்து நடைபெற்று வந்த உள்நாட்டு யுத்தத்தால், இணைந்திருந்த வடக்கு கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடைபெறவில்லை. 2006ஆம் ஆண்டு நீதிமன்ற



தீர்ப்பொன்றின் பிரகாரம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்டன. இதனைத்தொடர்ந்து 2008ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்துக்கான தேர்தலும், யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி வடக்கு மாகாணத்துக்கான தேர்தலும் நடைபெற்றது. எனவே, இந்த மாகாண சபை முறைமை நீண்ட காலமாக செயற்பட்டுவந்திருப்பதை அவதானிக்கலாம். ஆனால், இந்த நீண்ட கால கட்டத்தில், மாகாணசபை பட்டியல் 1இன் 9ஆவது அட்டவணையில் குறிப்பிடப் பட்ட, 13ஆவது திருத்தத்தின் குறித்த சில பிரிவுகள் செயல்படுத்தப்படாமல் இன்னமும் புறக்கணிக்கப்படுகின்றன. இந்த அநுபந்தங்கள் பின்வரும் விடயங்களைக் கையாள்வதற்கான ஏற்பாடுகளாகும்:

கலாநிதி நிர்மலா சந்திரகாசன்

அநுபந்தம் 1: சட்டம் ஒழுங்கு தொடர்பானது. இது பிரதானமாக, தேசிய பொலிஸ் பிரிவுடன் இணைந்த ஒரு மாகாண பொலிஸ் பிரிவின் பொலிஸ் அதிகாரத்துடனும் அதன் நிறுவன கட்டமைப்புடனும் சம்பந்தப்பட்டது.

அநுபந்தம் 2: காணியும் குடியேற்ற அதிகாரமும் தொடர்பானது.

அனுபந்தம் 3: கல்வி அதிகாரம் தொடர்பானது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களோடு, மாகாண சபைக்கென ஒதுக்கப்பட்ட ஏனைய எல்லா விடயங்களிலும் சட்டவாக்க அதிகாரத்தையும் நிறைவேற்று அதிகாரத்தையும் அது கொண்டிருக்கின்றது.

மாகாணங்களுக்கென ஒதுக்கப்பட்ட பட்டியலில் பின்வரும் விடயங்கள் உள்ளன. அவை: மாகாண வீடமைப்பும் நிர்மாணமும், விவசாயமும் விவசாய சேவைகளும், கிராமிய அபிவிருத்தி, சுகாதாரம், காணி, நீர்ப்பாசனம், மாகாண எல்லைக்குள்ளான வீதிகள் பாலங்கள், மாகாணத்துக்குள்ளான போக்கு வரத்துக்கான கப்பல் சேவைகள், மாகாணத்துக்குள்ளான பொருளாதார திட்டமிடலும் அமுலாக்கலும். கல்விச் சேவையும் மேற்பார்வையும், உள்ளூர் ஆட்சி நிர்வாகம் என்பனவாகும்.

இந்த மாகாண சபைக்கான பட்டியலில், தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என மத்திய அரசினால் பிரகடனப்படுத்தப்படாத, பழமை வாய்ந்த வரலாற்று நினைவிடங்களும் உள்ளடங்கும். அண்மையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில், அமைக்கப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சி தொடர்பான நடவடிக்கைக் குழுவில் தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் உள்ளடக்கப்படவில்லை என்பதை மனதிற்கொண்டு இதைக் குறிப்பிடுகிறேன்.

அத்துடன், பகிரப்பட்ட அதிகாரங்கள் தொடர்பிலான ஒரு பட்டியல் குறிப்பிடப்பட்ட விடயங்களில் மாகாண சபைகளும் மத்திய அரசும் அதிகாரங்களைப் பிரயோகிக்கலாம். இதில் மாகாண மட்டத்தில் நடைபெறும் திட்ட அமுலாக்கல் தொடர்பான மூலோபாயங்களை மேற்பார்வை செய்யவும் மதிப்பீடு செய்யவும் மாகாண சபைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கல்வியும் கல்விச்சேவையும், உயர் கல்வி, விவசாயமும் விவசாய சேவைகளும், சுகாதாரம், நீர்ப்பாசனம், சுற்றுலா போன்றவை இந்தப் படியலில் உள்ள சில முக்கிய விடயங்களாகும். மாகாண சபைக்கும் மத்திய அரசிற்கும் அதிகாரமுள்ள விடயங்களில் அதிகார வரம்புகள் பற்றிய சர்ச்சைகள் உருவாகுவது எதிர்பார்க்கப்பட வேண்டிய தொன்றே. மாகாண சபை நிரலில் உள்ள விடயங்கள் தொடர்பாகவும் பகிரப்பட்ட பொது நிரலில் உள்ள விடயங்கள் தொடர்பாகவும் மாகாண சபைகள் சட்டங்களை ஆக்கவும் அவற்றின்மீது நிறைவேற்று அதிகாரங்களை அவை பிரயோகிக்கவும் முடியும்.

இந்த அதிகாரங்கள் பெரும்பாலும் இந்திய அரசியல் யாப்பின் 6ஆவது பிரிவின் பிரகாரம் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படட அதிகாரங்களை ஒத்தவை. இந்திய மாநிலங்கள் மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்குவதில் வினைத்திறனுடன் செயற்படுவதை அவதானிக்கலாம். குறிப்பாக, தமிழ் நாடு தற்போது முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தலைமையில் இந்த விடயங்களில் மிகவும் வினைத்திறனுடன் இயங்குவது அவதானிக்கப்படுகிறது.

இங்கு எமக்கு முன்னால் உள்ள முக்கியமான கேள்வி, இலங்கையில் ஏன் மாகாணசபை முறைமை மக்களுக்கு சேவையாற்றுவதில் வெற்றிகரமாக செயற்பட முடியாமலுள்ளது? ஏன் பணத்தை வீண் விரயமாக்கும் ‘வெள்ளை யானை’ என வர்ணிக்கப்படுகின்றது? இவ்வாறு இருப்பதை நிவர்த்தி செய்வதற்கும், காத்திரமானதாக மக்களுக்காக செயற்பட வைப்பதற்கும் இந்த கட்டுமானத்தில் உள்ள தடைகளை நீக்கி, அத்தியாவசியமான திருத்தங்களை மேற்கொள்வதே சரியான அணுகு முறையாகும். எதிர்பார்த்தபடி செயற்படவில்லை என்பதற்காக, மாகாண சபை முறைமையை முழுமையாக நிராகரிப்பது என்பது, ‘குளிப்பாட்டியபின், குளிப்பாட்டிய நீருடன் குழந்தையையும் சேர்த்து வீசிவிடுவது’ போன்றதற்கு ஒப்பானதாகும்.

மாகாண சபைகள் பற்றி நிதானமாக மதிப்பீடு செய்து பார்த்தால், அவை முறையாகவும் முழுமையாகவும் இயங்கமால் இருப்பதற்கான பெரும்பாலான தடைகள், 13ஆவது திருத்தத்துடன் 1987ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் விளைவாகவே எழுவது தெரியவரும். இந்த சட்டத்தின்படி, மாகாண சபைகளுக்கான நிதி அதிகாரம், மாகாண பொது சேவைகளுக்கான அதிகாரம், மற்றும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அதிகாரம் என்பன ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தத்தின்படி நிறைவேற்று அதிகாரம் ஆளுநருக்கு வழங்கப்பட்டிருந்தாலும் ஆளுநர் மாகாண மந்திரிகள் சபையூடாக அல்லது மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு ஊடாகவே இந்த அதிகாரத்தைப் பிரயோகிக்கலாம். அதேவேளை, முதலமைச்சரும் மந்திரிகள் சபையும் ஆளுநர் எவ்வாறு செயற்படவேண்டும் என்கிற ஆலோசனையை வழங்குவதோடு, ஆளுநர் எல்லா சந்தர்ப்பங்களிலும் அந்த ஆலோசனைக்கு அமையவே செயற்படுதலும் வேண்டும். இந்த நடைமுறைக்கு விதிவிலக்காக உள்ள விடயமும் மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, அரசியல் யாப்பில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களில் மாத்திரம் ஆளுநர் தனது தீர்மானத்திற்கு இசைவாக செயற்படலாம்.

இந்திய அரசியல் யாப்பிலும் இது போன்றே நிறைவேற்று அதிகாரம் ஆளுநருக்கு வழங்கப்பட்டிருப்பினும் அங்கு வெஸ்ற்மின்ஸ்ரர் ஆட்சி முறைமையில், முதலமைச்சரின் ஆலோசனையின் படியே ஆளுநர் செயற்படுகிறார். ஆளுநர் என்பவர் பெயரளவிலான தலைமையை வகிக்கும் ஒருவராகவே செயற்படுகிறார். மாறாக, இலங்கையில் தமிழரை பெரும்பான்மையாகக்கொண்ட மாகாணங்களில் ஆளுநர்கள் பல சந்தர்ப்பங்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர்கள்போல் அதிகாரங்களைப் பிரயோகிப்பதைக் காணலாம். மாகாண அரசு நடைமுறையில் நிதி அதிகாரத்தை பொறுத்தவரையில் ஆளுநரின் அதிகாரக் கட்டுப்பாடு மிகவும் துல்லியமாக தெரியும். மாகாண சபையை நடத்துவதற்கு நிதி அவசியம். நிதியை பெறுவதில் உள்ள தடையே மாகாண சபைகள் முழுமையாக செயற்பட முடியாமல் இருப்பதற்கு முக்கிய காரணியாக இருக்கிறது. மாகாண சபை சட்டத்தினூடாகவே மாகாணத்தின் நிதிக் கட்டுப்பாட்டை ஆளுநர் பெறுகின்றார்.

(தொடரும்)



# உக்ரைனை சுற்றி வளைக்கும் ரஷ்யா! எத்தகைய படையை குவித்துள்ளது?

தாங்கிகள் முதல் பீரங்கிகள் வரை, வெடிமருந்துகள் முதல் விண்ணில் ஏவி தாக்கப்படும் ஏவுகணைகள் வரை உக்ரைனை சுற்றி 1,30,000 துருப்புகளை கொண்டுள்ளது ரஷ்யா. புடின், ஒரு நாட்டின் மீது படையெடுக்க தேவையான 70% துருப்புகளை உக்ரைன் எல்லையில் நிலை நிறுத்தியுள்ளார் என்று அமெரிக்க அதிகாரிகள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

நாளை கூட போர் ஆரம்பமாகலாம் என்று அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புத்துறை ஆலோசகர் ஜேக் சலீவன் எச்சரிக்கை செய்துள்ளனர். ஆனால் புட்டின், உக்ரைன் நாட்டில் படையெடுப்பாரா என்பது குறித்து தெளிவாக தெரிந்து கொள்ள இயலவில்லை. ஏன் என்றால் தொடர்ந்து மாஸ்கோ, உக்ரைன் மீது படையெடுப்பை மேற்கொள்ள எத்தகைய திட்டத்தையும் வைத்திருக்கவில்லை என்று தொடர்ந்து கூறி வருகிறது. குறிப்பிடத்தக்க இராணுவத் தலையீட்டிற்குத் தேவையான உள்கட்டமைப்பை உருவாக்க பணிகளை ரஷ்யா மேற்கொண்டு வருகிறது என்று ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

**உக்ரைனை சுற்றியுள்ள ரஷ்யாவின் இராணுவக் குவிப்பு எத்தகையது?**

இதுவரை ஏற்படுத்திய உள்கட்டமைப்புகளில் ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. சைபீரியா போன்ற தூர தேசத்தில் இருந்து எடுத்துவரப்பட்ட தாங்கிகளும் இதில் அடங்கும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இருப்பினும், இந்த கட்டமைப்பின் அளவைப் புரிந்து கொள்ள, முதலில் ரஷ்ய இராணுவத்தின் பண்புகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சுமார் 100 ரஷ்ய பட்டாலியன் தந்திரோபாய குழுக்கள் - 1,000 அல்லது அதற்கு மேற்பட்ட துருப்புக்களின் சண்டை அமைப்புகள், வான் பாதுகாப்பு, பீரங்கி மற்றும் தளவாடங்களுடன் - ரஷ்யா மற்றும் பெலாரஸ/டனான உக்ரைனின் எல்லைகளில் குவிந்துள்ளன என்று ரஷ்ய இராணுவ நகர்வுகளைக் கண்காணிக்கும் ரோச்சன் கன்சல்டிங் தெரிவித்துள்ளது.

பி.டி.ஜி. என அழைக்கப்படும் பெட்டாலியன் டாட்டிக்கல் குரூப் என்பது சொந்த ஆயுதங்கள், வான்வழி தாக்குதல் ஆயுதங்கள் மற்றும் லாஜிஸ்டிக்ஸை கொண்டிருக்கும் 600 முதல் 1000 வரையான துருப்புகளை குறிப்பதாகும். 2015ஆம் ஆண்டு ரஷ்யா - உக்ரைன் போரின் போது ரஷ்ய நிர்வாகத்திடம் 12க்கும் மேற்பட்ட பி.டி.ஜிக்கள் இல்லை. தற்போது 100 கணக்கான பி.டி.ஜிக்களை உக்ரைன் எல்லையில் நிறுத்தியுள்ளது ரஷ்யா என்று அறிவித்துள்ளது ரோச்சன். இன்னும் தீவிரமான விஷயம் என்னவென்றால், ரஷ்யாவின் 11 ஒருங்கிணைந்த ஆயுதப் படைகளில் 10 தற்போது உக்ரைன் அருகே உள்ளது.

பால்டிக், கருங்கடல், வடக்கு மற்றும் பசிபிக் கடற்படைகளில் கூடுதலாக ரஷ்யா காலாட்படை வீரர்கலை இணைத்துள்ளது. ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் பயிற்சியை நடத்த இருப்பதாக அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சகம் கூறியுள்ளது. அயர்லாந்தின் மேற்கு கடற்கரையில் ஏவுகணை ஏவுதல் உட்பட 140க்கும் மேற்பட்ட போர்க்கப்பல்கள் மற்றும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் இதில் பங்கேற்பார்கள் என்று கூறியுள்ளது. பால்டிக் மற்றும் வடக்கு கப்பற்படையில் பணியில் இருந்த போர்க்கப்பல்கள் தற்போது கருங்கடலை நோக்கி முன்னேறி செல்ல ஆரம்பித்துள்ளன. பசிபிக் கடற்படையில் இருந்து முக்கிய கப்பல்களும் மத்திய தரைக்கடல் நோக்கி செல்கின்றன.

இன்ஜினியரிங், லாஜிஸ்டிக்ஸ் மற்றும் மருத்துவ உதவியாளர்களும் இங்கே பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. இயந்திரமயமாக்கப்பட்ட படைகளுக்கு விரைவாக எரிபொருள் நிரப்பும் ரஷ்ய “பைப்லைன் துருப்புக்கள்” நாள் ஒன்றுக்கு 80 கி.மீ நீளத்திற்கு பைப்லைனை அமைக்க இயலும். கிரிமியாவிற்கு அருகில் உள்ள கிராஸ்னோடரில் இந்த பணிகள் நடைபெற்று வருவதாக கூறப்பட்டுள்ளது. உக்ரைன் எல்லைக்கு அருகில் இரத்த விநியோகத்தை ரஷ்யா நகர்த்தியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர் என்று ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

பெலாரஸில் ஒரு பெரிய ரஷ்ய இராணுவப் பயிற்சியின் காரணமாக உக்ரைன் அடிப்படையில் மூன்று பக்கங்களிலும் சூழப்பட்டுள்ளது. ரஷ்யா - பெலாரஸ் கூட்டு பயிற்சி பிப்ரவரி 10ஆம் திகதி துவங்கியது. இது வருகின்ற 20ஆம் திகதிக்குள் நிறைவடைய வேண்டும். பெலாரஸில் தற்போது தரையிறக்கப்பட்டுள்ள துருப்புகளின் எண்ணிக்கையானது பனிப்போருக்கு பிறகு அதிக அளவில் இறக்கப்பட்டுள்ளது இதுவே முதல்முறை. 30,000 போர் துருப்புக்கள், ஸ்பெட்ஸ்னாஸ் சிறப்பு நடவடிக்கை படைகள், SU-35 உள்ளிட்ட போர் விமானங்கள், இஸ்கண்டர் இரட்டை திறன் கொண்ட ஏவுகணைகள் மற்றும் S-400 வான் பாதுகாப்பு அமைப்புகள், ஆகியவையும் இங்கே பயிற்சி பெற்று வருகின்றன என்று நாட்டோவின் பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டொல்டென்பெர்க் பிப்ரவரி 3ஆம் திகதி அன்று கூறினார்.

**கடைசியாக ரஷ்யா பெரிய படைகளை எப்போது குவித்தது?**

பனிப்போருக்குப் பிறகு ரஷ்யா மிகப் பெரிய கட்டமைப்பில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. 1968 இல் அப்போதைய சோவியத் யூனியனும் அதன் வார்சா ஒப்பந்தக் கூட்டாளிகளும் செக்கோஸ்லோவாக்கியாவை ஆக்கிரமித்தபோது ரஷ்ய நிர்வாகம் இரண்டரை லட்சம் துருப்புக்களை அனுப்பியிருந்தாலும், இன்னும் பத்து பிரிவுகளுடன், தற்போதைய உருவாக்கம் பனிப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது உருவாக்கப்பட்ட மிகப்பெரிய சோவியத் பயிற்சியிலிருந்து வெகு தொலைவில் இல்லை.

1981 இல் “Zapad-81” 150,000 துருப்புக்களை உள்ளடக்கியது, மேலும் தற்போதைய நிலைமை ஏற்கனவே 1988 இல் மிகப்பெரிய நேட்டோ பயிற்சியான ரிஃபோர்ஜரை (Reforger) மிஞ்சிவிட்டது. இந்த பயிற்சில் 1,25,000 துருப்புகள் ஈடுபடுத்தப்பட்டது. 1991 இல் நடந்த முதல் வளைகுடாப் போர் அல்லது 1999 இல் செர்பியாவிற்கு எதிரான நேட்டோ வான்வழிப் பிரச்சாரத்திற்கு முன்னதாக ஐரோப்பாவில் அமெரிக்காவை விட ரஷ்யாவின் உருவாக்கம் இன்று பெரியதாக உள்ளது. இது முறையே 1994 மற்றும் 1999 இல் தொடங்கிய முதல் மற்றும் இரண்டாவது செச்சென் போர்களைக் கடந்தும் செல்கிறது. இதில் 50,000க்கும் குறைவான ரஷ்ய துருப்புக்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டனர்.

பால்கன் போர்களின் போது 1995 இல் செர்பியாவிற்கு எதிரான குரோஷிய தாக்குதல் ஆபரேஷன் ஸ்டோர்ம் ஆகும், இதில் 130,000 குரோஷிய துருப்புக்கள் ஈடுபடுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ரஷ்ய படையெடுப்பு எங்கே ஆரம்பமாகும் வாய்ப்புகள்?**

ரஷ்யா உக்ரைனின் மூன்று பக்கங்களிலும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. தெற்கில் க்ரீமியாவும், இரு நாடுகளின் எல்லையின் ரஷ்யப் பக்கத்திலும், வடக்கே பெலாரஸிலும் துருப்புகள் குவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு உக்ரைனில் உள்ள டோனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகியவை படையெடுப்பின் வாய்ப்புள்ள பகுதிகள் என்று பல ஆய்வாளர்களால் கணிக்கப்பட்டுள்ளது, ஏனெனில் ரஷ்ய மற்றும் உக்ரேனியப் படைகள் 2014 ஆம் ஆண்டு முதல் இப்பகுதியில் சண்டையிட்டு வருகின்றன. சி.என்.என். படி, பீரங்கி மற்றும் பிற கவசங்களை அதிகமாக கொண்டிருந்த மிகப்பெரிய தளமான யெல்னா தற்போது காலியாகிவிட்டது. சமீப நாட்களில் இந்த உபகரணங்கள் எல்லைக்கு மிக அருகில் நகர்த்தப்பட்டதாகத் தெரிகிறது.

2014 இல் ரஷ்யாவால் இணைக்கப்பட்ட கிரிமியா, படையெடுப்பைத் தொடங்க சரியான களமாக இருக்கும். 550 க்கும் மேற்பட்ட துருப்புக் கூடாரங்கள் மற்றும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் கிரிமியாவின் தலைநகரான சிம்ஃபெரோபோலுக்கு வடக்கே வந்துவிட்டதாக தெரிகிறது. இது கிரிமியாவின் முக்கிய துறைமுகத்தில் பல ரஷ்ய போர்க்கப்பல்கள் நங்கூரமிட்டதுடன் ஒத்துப்போனது. தெற்கு உக்ரேனிய பிராந்தியத்தின் நகர்வுகள் மால்டோவாவின் பிரிந்து சென்ற பகுதியான டிரான்ஸ்னிஸ்ட்ரியாவில் இருக்கும் துருப்புக்களால் ஆதரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெலாரஸ் வழியும் தாக்குதல் துவங்கலாம் ஏன் என்றால், ரஷ்ய துருப்புக்கள் ஏற்கனவே ஒரு இராணுவ பயிற்சிக்காக அங்கே முகாமிட்டுள்ளனர். ■

**- இந்தியன் எக்ஸ்பிரஸ்**

**உக்ரைன் மீது படையெடுப்பை மேற்கொள்ள மாஸ்கோ எத்தகைய திட்டத்தையும் வைத்திருக்க வில்லை என்று தொடர்ந்து கூறி வருகிறது. குறிப்பிடத்தக்க இராணு வத் தலையீட்டிற்குத் தேவையான உள்கட்டமைப்பை உருவாக்க பணிகளை ரஷ்யா மேற்கொண்டு வருகிறது என்று ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.**

ஈழநாடு


# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

**23)** நான்கு பாடசாலைகள் 420 புத்தகங்களைச் சமமாகப் பகிர்ந்து கொண்டனர் எனின், ஒரு பாடசாலைக்குக் கிடைத்த புத்தகங்கள் எத்தனை?

..............................................................................................................

**24)** 

அருகிலுள்ள A பாத்திரத்திற்குள் B என்ற பாத்திரத்தினால் 3 தடவைகள் நீரூற்றப்பட்டன. எனின் மேலதிகமாக வெளியேறும் நீரின் அளவு யாது?

..............................................................................................................

**25)** தரப்பட்ட எண்கோலத்தை அவதானித்து இடைவெளியை நிரப்புக.

i) 1, 4, 9, 16, ----------, ------------

ii) 3, 5, 7, 9, ---------, -----------

**26)** புகையிரத நிலையமொன்றிலிருந்து பி.ப 2.45 இற்கு புறப்பட வேண்டியிருந்த புகையிரதம் 30 நிமிடங்கள் தாமதமாகிப் புறப்பட்டன.

i) புகையிரதம் புறப்பட்ட நேரம் யாது?......................................................

ii) புகையிரதம் புறப்பட்ட நேரத்தை நியம நேரமாக எழுதுக. ...................................

**27)** அம்மா பணியாரங்களைத் தயாரிப்பதற்கு 2l பாணியைக் கொண்டு வந்தார். அவற்றில் 1l 500 ml பாணி பயன்படுத்தப்பட்டது. எஞ்சிய பாணியின் அளவினை மில்லிலீற்றரில் எழுதுக?

..............................................................................


**28)** பென்சிலின் நீளத்தை mm இல் எழுதுக.



.......................................................

**29)** வரைபை அவதானித்து விடை எழுதுக.

| பூக்கள் | எண்ணிக்கை |
|---|---|
| மல்லிகை | 04 |
| ரோஜா | 02 |
| செவ்வரத்தை | ....... |
| செவ்வந்தி | 03 |




i) வரைபை அவதானித்து அட்டவணையைப் பூரணப்படுத்துக.

ii) செவ்வந்தியை விரும்புவோரின் எண்ணிக்கையை வரைபில் குறித்துக் காட்டுக.

(30 புள்ளிகள்)

❖ **சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

**31)** சூரிய நமஸ்காரச் செயற்பாட்டின் ஒத்த படிநிலைகள்.
1) 4, 7 2) 3, 10 3) 2, 9

**32)** மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் மூன்றாவது படிநிலை.
1) மலர்வு 2) திடசித்தம் 3) உடலைத்தளர்த்துதல்

**33)** நாம் பொது இடத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளில் ஒன்றல்லாதது.
1) ஏனையோருக்கு இடைஞ்சல் விளைவித்தல்.
2) முதியோருக்கு உதவுதல்.
3) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.

**34)** தேசியக் கொடியைச் சூழவுள்ள மஞ்சள் நிறம் குறித்து நிற்பது?
1) நாட்டின் தலைவர் 2) தமிழர் 3) தேசிய ஒற்றுமை

**35)** தேசியக் கொடியில் குறிப்பிடப்படாத இனம்.
1) தமிழர் 2) பறங்கியர் 3) முஸ்லீம்

**36)** எமது நாட்டிலுள்ள உலக மரபுரிமையாக விளங்குவது.
1) சிகிரியா 2) பெருக்க மரம் 3) ஓவியங்கள்

**37)** இலங்கை அணி கிரிக்கெட் போட்டியில் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய ஆண்டு.
1) 1986 2) 1976 3) 1996

**38)** புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு முன்னர் அனுமதி பெறச் செல்ல வேண்டிய இடம்.
1) பிரதேச சபை 2) கிராம சேவையாளர் 3) பிரதேச செயலகம்

**39)** தாவரம் நீர் கனியுப்புக்களை எதனூடாகப் பெற்றுக் கொள்கின்றது.
1) இலை மூலம் 2) தண்டு மூலம் 3) வேரின் மூலம்

**40)** வித்துக்களுடன் உண்ண வேண்டிய உணவு வகை
1)தக்காளி 2) பாகல் 3) புடோல்

## விடைகள்

**23.** 9.50, 22.00, 43.00, 7.25

**24.** 105 புத்தகங்கள் **25.** 50ml

**26.** i) 25, 36 ii) 11, 13 **27.** i) பி.ப. 3.15 நிமிடங்கள் ii) 15:15 **28.** 500ml

**29.** 35 mm **30.** i) 5 ii)

**31.** 3, 10 (2) **32.** திடசித்தம் (2) **33.** ஏனையோருக்கு இடைஞ்சல் விளை

**34.** தேசிய ஒற்றுமை (3) **35.** பறங்கியர் (2) **36.** சிகிரியா (1) **37.** 1996 (3)

**38.** பிரதேச சபை (3) **39.** வேர் மூலம் (3) **40.** தக்காளி (1)

கல்வி tv CHANNEL-1

## 15.02.2022
## செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

கல்வி tv CHANNEL - 2

## 15.02.2022
## செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# 31,600 தொன் நெல் கொள்வனவு கிழக்கே அதிகளவு பங்களிப்பு!

## சந்தைப்படுத்தல் அதிகார சபை

கொழும்பு, பெப். 15

**பெரும்போக அறுவடை தற்போது நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. இந்த பருவத்தில் இதுவரை 31 ஆயிரத்து 600 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப் படுத்தல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து அதிகளவில் நெல் கொள்வனவு செய்யப்பட்டன என்று சபையின் தலைவர் நீல் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டு நெல் ஒரு கிலோ 90 ரூபாய்க்கும், சாம்பா நெல் 92 ரூபாய்க்கும், கீரி சம்பா 95 ரூபாய்க்கும் நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபையால் கொள்முதல் செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.





## வீதிகளில் உலரவிடப்படும் நெல்; போக்குவரத்தில் பெரும் இடர்கள்!

கல்முனை, பெப். 15

அம்பாறை மாவட்டத்தில் தற்போது அடைமழை மீண்டும் பெய்து வருவதனால் அறுவடை செய்யப்பட்ட நெல்லை பிரதான வீதிகள், கிளை வீதிகளில் உலரவிடுவதால் போக்குவரத்து இடர்பாடுகள் ஏற்படுகின்றன.

நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, சொறிக்கல்முனை, சவளக்கடை, மத்தியமுகாம் ஆகிய பிரதேசங்களிலேயே இந்தச் செயல்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நெல்லை உலரவிடுவதற்கு போதியளவு தள வசதிகள் இன்மையாலேயே வீதிகளில் நெல்லை உலரவிடும் செயலில் ஈடுபடுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும், வீதிகளில் ஒரு பகுதியை மறித்து முன்னெடுக்கப்படும் இந்த செயலால் வீதிகளில் பயணம் செய்வதில் இடர்பாடுகளை எதிர்நோக்கும் அதேநேரம், விபத்துக்களையும் எதிர்கொள்வதாகப் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். எனவே, இந்த செயல்கள் நிறுத்தப்பட்ட உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர். (ஐ)

## சுதேச மருத்துவ நூல்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு



மட்டக்களப்பு, பெப். 15

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தால் வெளியீடு செய்யப்பட்ட கிழக்கின் "அவிழ்தம்" சஞ்சிகை மற்றும் "ஆயிரம் வேரும் அரும் மருந்தும்" என்ற நூல்களை வழங்கும் நிகழ்வு கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் திருமதி இ.ஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் கலந்துகொண்டார்.

கோவிட் 19 தொற்றுக் காலத்தில் சுதேச மருத்துவத் திணைக்களம் பெரும் பங்களிப்புக்களை மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களுக்கும் செய்திருந்தது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள், தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வசித்த குடும்பங்கள் மற்றும் தொற்றினால் பாதிக்கப்படாதவர்கள் என சகல மக்களுக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் சுவதாரணி மற்றும் இமியுன் பூஸ்டர் பானங்களுடன் ஆயுள்வேத மருந்துகளையும் கிழக்கு மாகாணத்திலுள்ள வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் இரவு பகல் பாராது களத்தில் நின்று வழங்கி வந்த செயல்பாடுகளை சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே. ஜே. முரளிதரனின் கவனத்திற்கு மாகாண ஆணையாளர் வைத்தியர் திருமதி இ. ஸ்ரீதர் கொண்டு வந்தார்.

இதன்போது மாகாண ஆணையாளர் வைத்தியர் திருமதி இ. ஸ்ரீதரினால் கிழக்கின் அவிழ்தம் சஞ்சிகை மற்றும் ஆயிரம் வேரும் அரும் மருந்தும் என்ற நூல்களை சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரனுக்கு வழங்கி வைத்த அதேவேளை நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் சுவதாரணி பொதிகளையும் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் சுதேச மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவின் வைத்தியர்களான எஸ். சிவச்செல்வன், எஸ். சதீஸ், நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எஸ். நவந்திரராஜா உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். (ஐ)

## குளங்களின் நீர்மட்டம் மட்டக்களப்பில் உயர்வு

மட்டக்களப்பு, பெப். 15

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக பெய்துவரும் கடும் மழையால் குளங்களின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது. இதேவேளை, மழையால் விவசாய செய்கை இதனால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் பெரும்போக வேளாண்மை அறுவடையிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் மாவட்டத்தின் சிறிய மற்றும் பெரிய குளங்களின் நீர் மட்டங்களும் அதிகரித்துள்ளன. அந்தக் குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உன்னிச்சைக்குளத்தின் நீர்மட்டம் 32அடி 10அங்குலம், உறகாமம் குளத்தின் நீர்மட்டம் 14அடி 11அங்குலம், வாகனேரிக் குளத்தின் நீர்மட்டம் 18அடி 9அங்குலம்,

கட்டுமுறிவுக்குளத்தின் நீர்மட்டம் 11அடி 8அங்குலம், அக்குளத்தில் 2அங்குல மேலதிக நீர் வெளியேற்றப்படுகின்றது,

கித்துள்வெவ குளத்தின் நீர்மட்டம் 8அடி 5அங்குலம், வெலிக்காக்கண்டி குளத்தின் நீர்மட்டம் 15அடி 5அங்குலம்,

புணானை அணைக்கட்டு 7அடி 9அங்குலமாக நீர்மட்டம் உயர்ந்துள்ளதாக பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)



## மூதூர் - கட்டைபறிச்சான் வீதிக்கு மேலாகப் பாய்கிறது வெள்ளம்!

திருகோணமலை, பெப். 15

தொடர்ச்சியாக பெய்துவரும் பலத்த மழை காரணமாக மூதூர் - கட்டைபறிச்சான் இறால் பாலத்தை மேவி வெள்ளநீர் பாய்ந்தோடுகின்றது.

இதனால் இவ்வீதியூடாக பயணம் செய்வோர் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியூடாக பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர், கணேசபுரம் மற்றும் அம்மன்நகர் போன்ற பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள், மூதூர் நகருக்கு தினந்தோறும் பயணம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆசிரியர் இடமாற்றங்களில் சமூகநீதியை பேணவேண்டும்!

## கிண்ணியா ஆசிரியர்கள் கோரிக்கை

கிண்ணியா, பெப். 14

கிண்ணியா வலயக் கல்வி அலுவலக பிரிவில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்துக்குக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப படிவங்கள், வலயத்தில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும், ஒரே பாடசாலையில் எட்டு வருடங்களை பூர்த்தி செய்த ஆசிரியர்கள், குறித்த பாடசாலை அதிபர் ஊடாக அவற்றை பூர்த்தி செய்து வலயக்கல்வி பணிமனைக்கு சமர்ப்பிக்குமாறு, வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, கடந்த காலங்களில் கிண்ணியா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்களில் சமூக நீதி பேணப்படவில்லை எனவும், அரசியல், கட்சி, நட்பு, பதவி நிலை மற்றும் உறவுமுறை போன்ற விடயங்கள் ஆதிக்கம் செலுத்தின என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், கடந்த காலங்களில், ஆசிரியர் இடமாற்றத்தில் அநீதி இழைக்கப்பட்டோர் மேன்முறையீடு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதும், ஆசிரியர் இடமாற்ற சபையின் விதிமுறையை மீறி, அந்த மேன்முறையீட்டு சபையில் வலய கல்விப் பணிப்பாளர் பிரசன்னமாகி இருந்தமை இடமாற்ற சபையின் சுயாதீன செயற்பாடுகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதாகவும் ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டு கின்றனர்.

தேசிய ரீதியில் கிண்ணியாவின் கல்வி வளர்ச்சி தொடர்ந்து கடைசி நிலையில் இருப்பதற்கு பாடசாலை தேவை கருதி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படாமையும் ஆசிரியர் வளங்கள் சமமாகப் பகிரப்படாமையும் ஒரு முக்கிய காரணம் என புத்திஜீவிகளும் சமூக அமைப்புக்களும் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வருகின்றனர்.

எனவே, புதிய வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் மேற்கொள்ளப்பட இருக்கின்ற இந்த இடமாற்றங்களில் சமூக நீதி பேணப்பட வேண்டுமென ஆசிரியர்கள் எதிர்பார்க்கின்றனர். (ஐ)

ஈழநாடு



# தென்கொரியாவில் நான்காவது தடுப்பூசி

## பணிகள் இம்மாத இறுதியில் ஆரம்பம்



சியோல், பெப். 15

இந்த மாத இறுதிக்குள் நான்காவது கோவிட் தடுப்பூசியை வழங்கத் தொடங்கவுள்ளதாக தென்கொரியா அறிவித்துள்ளது. அத்துடன், ஒமைக்ரோன் பரவல் அதிகரிப்புக்கு மத்தியில் பற்றாக்குறையை குறைக்க மில்லியன் கணக்கான கோவிட் வீட்டுச் சோதனைக் கருவிகளை வழங்கவுள்ளதாக தென்கொரிய அதிகாரிகள் நேற்று திங்கட்கிழமை உறுதிப்படுத்தினர்.

தென்கொரியாவின் 52 மில்லியன் மக்கள் தொகையில் 57 வீதத்திற்கும் அதிகமான மக்கள் முதல் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். இதனால் தொற்று நோயின் தீவிர ஆபத்து மற்றும் இறப்புகள் குறைந்துள்ளதாகவும் தென் கொரிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்நிலையில் அதிக ஆபத்துள்ள குழுக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நான்காவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தென்கொரிய சுகாதார அமைச்சர் குவான் டியோக்-சியோல் தெரிவித்தார்.

60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களிடையே சமீபத்தில் தொற்று பரவல் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் முதியவர்கள் மற்றும் நோய் நோய் எதிர்ப் பாற்றல் குறைந்த நோயாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இரண்டாவது பூஸ்டர் தடுப்பூசிகள் வழங்கப்படும் எனவும் குவான் டியோக்-சியோல் கூறினார். தென்கொரியாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை 54,619 புதிய தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டனர். இவர்களுடன் நாட்டில் உறுதி செய்யப்பட்ட தொற்று நோயாளர் தொகை 1,405,246 ஆக அதிகரித்துள்ள தாக கொரியா நோய் கட்டுப் பாடு மற்றும் தடுப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், ஞாயிற்றுக் கிழமை மேலும் 21 பேர் இறந்த நிலையில் மொத்த கொரோனா மரணங்கள் 7,102 ஆக பதிவாகியுள்ளன. (அ)

## ஜேர்மன் ஜனாதிபதியாக மீண்டும் பிராங்க் வோல்டர் ஸ்டீன்மையர்!

பேர்லின், பெப். 15

ஜேர்மனியின் ஜனாதிபதியாக பிராங்க் வோல்டர் ஸ்டீன்மையர் இரண்டாவது முறையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



ஜேர்மன் ஜனாதிபதியைத் தேர்வு செய்யும் கூட்டத் தொடர் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் பெரும்பான்மையான வாக்குகள் பெற்று பிராங்க் வோல்டர் ஸ்டீன்மையர் தேர்வு செய்யப்பட்டார்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் பேசிய பிராங்க் வோல்டர் ஸ்டீன்மையர், ஜனநாயகத்திற்காக போராடுபவர்களுக்கு பக்கத்தில் நான் இருப்பேன் எனத் தெரிவித்தார்.

உக்ரைன் எல்லையில் ரஷ்யா படைகளை குவித்து வருவது உக்ரைனுக்கு ஆபத்து. அங்குள்ள மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கான உரிமை உள்ளது. அதனை அழிக்க எந்த நாட்டுக்கும் உரிமை இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## சிறுவர்கள் கண்படும் இடங்களில் புகைத்தல் விளம்பரம் வேண்டாம்!

### ஆதரவாக சுவிஸ் மக்கள் வாக்களிப்பு!




பேர்ண், பெப். 15

சுவிஸ் மக்கள் நேற்று முன் தினம் நடத்தப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் சிறுவர்களினதும் இளையோரினதும் பார்வைபடும் இடங்களில் சிகரெட் விளம்பரங்களைத் தடைசெய்வதற்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறார்கள். சிகரெட் புகைத்தலுக்கு எதிராக எதிர்காலத்தில் மேலும் உறுதியான சட்டங்களை உருவாக்குவதற்கு இந்தத் தீர்ப்பு வழிசமைத்துள்ளது.

நாட்டின் 26 கன்ரன்களிலும் நடந்த வாக்கெடுப்பில் தடைக்கு ஆதரவாக 56.6வீ மக்கள் வாக்களித்திருக்கின்றனர். சிறுவர்கள் கூடும் இடங்கள், அவர்களது பார்வை படுகின்ற இடங்களில் விளம்பரங்கள் செய்வதும், சிறுவர்களை இலக்கு வைத்து அவர்களைக் கவரும் விதமாக சிகரெட் விளம்பரங்களை - குறிப்பாக எலெக்ரோனிக் சிகரெட் விளம்பரங்களைச் செய்வதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டும் இந்த மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு முன்னெடுக்கப்பட்டது.

சுவிற்சர்லாந்து பிலிப் மொறிஸ் பிரிட்டிஷ் அமெரிக்கன் போன்ற பிரபலமான சர்வதேச சிகரெட் கம்பனிகளின் தாயகம். ஐரோப்பாவில் சிகரெட் விளம்பரங்களைக் கட்டுப்படுத்து வதில் மிகப் பலவீனமான சட்டங்களைக் கொண்ட நாடாகவும் அதுவே உள்ளது. அங்கு நால்வரில் ஒருவர் புகைப் பழக்கம் கொண்டவர்கள். புகைபிடிப்பவர்களில் 57 வீதமானவர்கள் தங்களது சிறுபராயத்திலேயே அந்தப் பழக்கத்தை ஆரம்பித்தவர்களாக உள்ளனர். சமீபகால ஆய்வுகள் சிறுவயதினர் புகை பிடிப்பது அதிகரித்து வருவதைக் காட்டுகின்றன. நாட்டின் பொருளாதாரத்தில் புகையிலை தொழில் வருடாந்தம் ஐந்து பில்லியன் ஈரோக்கள் பங்களிப்புச் செலுத்தி வருகிறது. (அ)

### உக்ரைன் நெருக்கடி நிலைமை:

## மக்ரோன் வெற்றி பெற்றால் பிரதமராக கிறிஸ்டின் லகார்ட்?



பரிஸ், பெப். 15

பிரான்ஸில் பெண் ஒருவர் பிரதமராக வரக்கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றன.

மக்ரோன் தேர்தலில் வென்று மீண்டும் அதிபராகத் தெரிவானால் அவரது அரசில் அடுத்த பிரதமராகப் பதவியேற்கக் கூடிய நிலையில் உள்ளவர்களது பட்டியலில் கிறிஸ்டின் லகார்ட் முதலி டத்தில் உள்ளார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் முன்னாள் தலைவரும் ஐரோப்பிய மத்திய வங்கியின் தற்போதைய தலைவருமாகிய கிறிஸ்டின் லகார்ட் அம்மையார், அவ்வாறு ஓர் அரசியல் பதவியைத் தான் விரும்பவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

பிரான்ஸை உலக அளவில் பெருமைக்குள்ளாக்கி வருகின்ற அவரது பணிகளுக்கு மதிப்பளித்து நாட்டின் உயர் குடிமக்களுக்கு அதிபரால் வழங்கப்படுகின்ற உயர் கௌரவத்தை மக்ரோன் அவருக்கு வழங்கியிருக்கிறார். எலிஸே மாளிகைப் பூங்காவில் நேற்று முன் தினம் அந்தக் கௌரவிப்பு வைபவம் நடைபெற்றிருக்கிறது. அதற்குச் சில தினங்கள் முன்பாகக் கருத்து வெளியிட்ட முன்னாள் அதிபர் நிக்கலஸ் சார்க்கோசி, 2022 இல் மக்ரோன் வெற்றி பெற்றால் கிறிஸ்டின் லகார்டைப் பிரதமராக நியமிக்க வேண்டும் என்று தனது விருப்பத்தை வெளியிட்டிருந்தார்.

ஏப்ரல் 10 ஆம் திகதி வாக்களிப்பு நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன. மரின்லு பென்னின் கட்சியில் இருந்து சில முக்கியஸ்தர்கள் மற்றொரு தீவிர வலதுசாரியான எரிக் செமூர் அணியில் இணைந்துள்ளனர். அதனால் தீவிர வலதுசாரிகளிடையே பெரும் மோதல் வெடித்துள்ளது. தேர்தலுக்கு முந்திய கணிப்புகளின் படி அதிபர் மக்ரோன் தொடர்ந்தும் முன்னிலையில் இருந்து வருகிறார். அவரோடு இம்முறை இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெறப்போவது யார் என்பதைத் தெளிவாகக் கணிப்பிட முடியாத படி போட்டிக் களம் உள்ளது. பிரான்ஸின் அதிபர் தேர்தலில் எந்த வேட்பாளரும் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறாவிட்டால் ஆகக் கூடிய வாக்கு களைப் பெற்றவர்களில் முதல் இருவர் இரண்டாவது சுற்றைச் சந்திப்பர். இரண்டாவது சுற்று வாக்களிப்பு ஏப்ரல் 24ஆம் திகதி இடம்பெறும். மரின் லு பென்னா, எரிக் செமூரா, வலெரி பெக்ரெஸா இவர்களில் யார் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறப் போகிறார்கள் என்பதைத் தெளிவாக மதிப்பிட முடியாதபடி மூவரிடையிலும் கடும் போட்டி காணப்படுகிறது. (அ)

## இராட்சத அலையில் சிக்கி 11 பேர் மரணம்!

### இந்தோனேஷியாவில் சோகம்

ஜகார்த்தா, பெப். 15

இந்தோனேஷியாவின் கிழக்கு ஜாவா மாகாணத்தில் உள்ள ஜெம்பர் மாவட்டத்தில் பயங்கன் என்கிற கடற்கரை உள்ளது.

இந்த கடற்கரையில் நேற்று முன் தினம் பாரம்பரிய சடங்கு நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

இதனை முன்னிட்டு 20இற்கும் அதிகமானோர் கடற்கரையில் திரண்டு சடங்குகளை செய்து கொண்டிருந்தனர். அப்போது கடலில் திடீரென எழுந்த இராட்சத அலை கரையில் நின்று கொண்டிருந்த 23 பேரை உள்ளே இழுத்து சென்றது.

இதனால் அங்கு பெரும் பதற்றம் உருவானது. இதையடுத்து அக்கம்பக்கத்தினர் வழங்கிய தகவலுக்கு அமைவாக தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீவிர மீட்புப் பணியில் இறங்கினர். எனினும் அதற்குள் 12 பேர் தாமாக நீந்தி கரை சேர்ந்தனர். மாயமான 11 பேரை தேடும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டனர். (அ)

## இந்த வாரம் உலகத் தலைவர்களுடன் பேச்சு நடத்துகிறார் பிரிட்டன் பிரதமர்

லண்டன், பெப். 15

உக்ரைன் நெருக்கடியை தணிக்கும் முயற்சியில் இந்த வாரம் உலகத் தலைவர்களுடன், பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ரஷ்யா எந்த நேரத்திலும் உக்ரைன் மீது படையெடுப்பைத் திட்டமிடலாம் என்று உளவுத்துறை எச்சரித்துள்ள நிலையில் இந்த செய்தி வந்துள்ளது.

பிரதமர் இந்த வாரம் ஐரோப்பாவுக்கான மற்றொரு பயணத்தில் இராஜதந்திர முயற்சிகளைத் தொடருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நாட்டின் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து உக்ரைனுக்கு விஜயம் செய்ய அழைக்கப்பட்டார்.

'பைடனின் வருகை ஒரு சக்திவாய்ந்த சமிக்ஞையாக இருக்கும் மற்றும் விரிவாக்கத்துக்கு பங்களிக்கும்' என்று ஜனாதிபதி ஜெலென்ஸ்கியின் அலுவலகத்திலிருந்து வெளியான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழைப்பின்போது வெள்ளை மாளிகையானது, ரஷ்ய இராணுவத் தாக்குதலைத் தடுக்கும் முயற்சியில் தடுப்பு மற்றும் இராஜதந்திரம் ஆகிய இரண்டையும் தொடர்ந்து முன்வைக்க இருவரும் ஒப்புக் கொண்டதாகக் கூறியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, உக்ரைன் ரஷ்யா மற்றும் ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பின் மற்ற உறுப்பினர்களுடன் 48 மணி நேரத்திற்குள் பேச்சுவார்த்தை நடத்த அழைப்பு விடுத்தது.



57 உறுப்பினர்களுக்கு இடையேயான ஒப்பந்தங்களின் தொடரான வியன்னா ஆவணத்தின் கீழ் கடந்த வெள்ளிக்கிழமை எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு மொஸ்கோ பதிலளிக்கத் தவறிவிட்டது என உக்ரைனின் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபா, கூறியுள்ளார்.

இதையடுத்து, அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க உள்ளோம் என டுவிட்டரில் தெரிவித்துள்ளார். (அ)



# ஸ்மித்துக்கு ஓய்வு

சிட்னி, பெப். 15

இலங்கை அணிக்கு எதிரான எஞ்சிய இருபது - 20 கிரிக்கெட் போட்டிகளில் ஸ்டீவ் ஸ்மித் விளையாட மாட்டார் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிராக நேற்றுமுன்தினம் சிட்னி மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது இருபது -20 போட்டியில் சிக்ஸர் ஒன்றை தடுக்கும் முயற்சியில் ஸ்டீவ் ஸ்மித்தின் அபார முயற்சியில் அவரின் தலை தரையில் மோதியது. இதனால் அவருக்கு மூளை அதிர்ச்சி ஏற்பட்டது.

இந் நிலையில் நட்சத்திர துடுப்பாட்ட வீரர், மூளை அதிர்ச்சி பயத்தில் இருந்து முழுமையாக குணமடைவதற்காக இலங்கையுடனான எதிர்வரும் ஆட்டங்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

எனினும் ஸ்டீவ் ஸ்மித் அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவின் பாகிஸ்தான் சுற்றுப் பயணத்துக்கு முழுத் தகுதியுடன் இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிரிக்கெட் அரங்கில் ஸ்மித் தலையில் அடிபட்டு அதிர்ச்சியடைவது இது முதல் சந்தர்ப்பம் அல்ல. 2019 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக லோர்ட்ஸில் நடந்த ஆஷஷ் போட்டியில் ஜோஃப்ரா ஆர்ச்சர் வீசிய பந்து ஸ்மித்தின் கழுத்துப் பகுதியை பதம் பார்த்தது. 2020 இல் இங்கிலாந்தில் நடந்த வெள்ளை பந்து தொடரிலும் ஸ்மித் உபாதைக்குள்ளாகி வெளியேறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)




# பினுரவுக்கு கொரோனா!

சிட்னி, பெப். 15

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் பங்கெடுத்துள்ள இலங்கை வேகப்பந்து வீச்சாளர் பினுர பெர்னாண்டோவுக்கு கோவிட் 19 தொற்று ஏற்பட்டுள்ளது.

இரண்டாவது ஒருநாள் போட்டிக்கு முன்பு மேற கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையிலேயே அவருக்கு கோவிட்-19 தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் நேற்றுமுன்தினம் சிட்னியில் நடந்த இரண்டாவது டி:20 போட்டியை அவர் தறவிட்டார். (ஐ)

# சுப்பர் ஓவரில் இலங்கையை வென்றது அவுஸ்திரேலியா!




சிட்னி, பெப். 15

இலங்கைக்கு எதிரான இரண்டாவது இருபது போட்டியில் அசத்திய அவுஸ்திரேலிய அணி 'சுப்பர் ஓவரில்' வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இலங்கை அணி, ஐந்து போட்டிகள் கொண்ட 'இருபது - 20' தொடரில் விளையாடுகின்றன. முதல் போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது. சிட்னியில் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு அணித் தலைவர் அரோன் பின்ஞ் 25 ஓட்டங்கள், ஜோஷ் இங்லிஸ் 48 ஓட்டங்கள் கைகொடுத்தனர். மக்ஸ்வெல் 15 ஓட்டங்கள், ஸ்டீவ் ஸ்மித் 14 ஓட்டங்கள், ஸ்ரொய்னிஸ் 19 ஓட்டங்கள் என்று சோபிக்கத் தவறவே, அந்த அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்க 164 ஓட்டங்களை எடுத்தது.

சவாலான இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு தனுஷ்க குணதிலக ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். அவிஸ்க பெர்ணான்டோ 5 ஓட்டங்கள், சரித் அசலங்க ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்து ஏமாற்றினர். தினேஷ் சந்திமால் 19 ஓட்டங்களுடன் வெளியேறவே ஓரளவு போராடிய தசூன் சானக போராடி 34 ஓட்டங்களை எடுத்தார். தொடக்க வீரரான பதும் நிஷங்க போராடி அரைச்சதம் கடந்தார்.

இறுதி ஓவரில் வெற்றிக்கு 19 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஸ்ரொய்னிஸ் அந்த ஓவரை வீசினார். முதல் பந்தில் பௌண்ட்ரி அடித்தார் நிஷங்க. எனினும், 73 ஓட்டங்களுடன் 3ஆவது பந்தில் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த மகேஷ் தீக்சன ஓர் ஓட்டம் எடுக்க கடைசி பந்தில் 5 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இறுதிப் பந்தை துஷ்மந்த சாமீர பௌண்ட்ரிக்கு அனுப்பவே இலங்கை அணியும் 164 ஓட்டங்களை எடுக்கவே போட்டி சமநிலையில் முடிவடைந்தது. இந்த இலக்கை இலங்கை 8 விக்கெட்களை இழந்து பெற்றது.

இதனால், வெற்றி - தோல்வியை தீர்மானிக்க சுப்பர் ஓவர் வழங்கப்பட்டது. இதில் முதலில் களமிறங்கிய இலங்கை அணி ஒரு ஓவரில், ஒரு விக்கெட் இழப்புக்கு 5 ஓட்டங்களையே பெற்றது. சுலப இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணி ஹசரங்க வீசிய ஓவரில் ஸ்ரொய்னிஸ் அடுத்தடுத்து இரு பௌண்ட்ரிகளை விளாசி வெற்றியாக்கினார். (ஐ)

# ஐ. பி. எல். வீரர்கள் ஏலம் இரண்டாம் நாள் விவரம்!




பெங்களூர், பெப். 15

ஐ. பி. எல்., வீரர்கள் ஏலத்தின் இரண்டாம் நாளில் இங்கிலாந்தின் லிவிங்ஸ்டன் அதிகபட்சமாக 11.50 கோடி இந்திய ரூபாய்க்கு பஞ்சாப் அணியில் ஒப்பந்தமானார்.

இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) கிரிக்கெட் 15ஆவது தொடர் இந்த ஆண்டு நடக்கவுள்ளது. இதில் 'நடப்பு சம்பியன்' சென்னை, மும்பை, கொல்கத்தா உள்ளிட்ட 8 அணிகளுடன் இம்முறை புதிதாக லக்னோ, குஜராத் சேர்த்து மொத்தம் 10 அணிகள் பங்கேற்க உள்ளன. இதற்கான வீரர்கள் 'மெகா' ஏலம், கடந்த இரண்டு நாட்களாக பெங்களூரில் நடந்தது.

முதல் நாள் ஏலத்தில், 10 அணிகள் சார்பில் 74 வீரர்கள் வாங்கப் பட்டனர். நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஏலம் நடந்தது. முதல் நபராக ஏலத்தில் வந்த தென்னாபிரிக்காவின் மார்க்ரம், ரூ. 2. 60 கோடிக்கு ஹைதராபாத் அணியில் ஒப்பந்தம் செய்யப் பட்டார்.

இந்திய டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் ரகானேயை அடிப்படை தொகையான ரூ. ஒரு கோடிக்கு கொல்கத்தா அணி வாங்கியது. இங்கிலாந்தின் சகலதுறை வீரர் லியம் லிவிங்ஸ்ரனை ஏலத்தில் எடுக்க ஹைதராபாத், குஜராத், பஞ்சாப் அணிகளுக்கு இடையே போட்டி நிலவியது. முடிவில் பஞ்சாப் அணி, ரூ. 11.50 கோடிக்கு தட்டிச் சென்றது. இரண்டாம் நாளில் அதிக விலைக்கு வாங்கப்பட்ட வீரரானார்.

இதன்பின் ஏலத்தில் வந்த மேற்கிந்தியாவின் சகலதுறை வீரர் ஒடியன் ஸ்மித்தை, பஞ்சாப் அணி ரூ. 6 கோடிக்கு ஒப்பந்தம் செய்தது.

'நடப்பு சம்பியன்' சென்னை அணி, சகலதுறை வீரர் ஷிவம் துபேவை ரூ. 4 கோடிக்கு ஒப்பந்தம் செய்தது.

இதில் நியூசிலாந்தின் கொன்வே (ஒரு கோடி), மிட்சல் சான்ட்னர் (ரூ. 1.9 கோடி), தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியஸ் (ரூ. 50 லட்சம்) ஆகியோரை சென்னை அணி ஒப்பந்தம் செய்தது. இங்கிலாந்தின் சகலதுறை வீரர் ஜோப்ரா ஆர்ச்சரை வாங்கி ஹைதரபாாத், மும்பை அணிகளுக்கு இடையே போட்டி நிலவியது. முடிவில் மும்பை அணி ரூ. 8 கோடிக்கு வாங்கியது.

விலைபோகாத வீரர்கள் பட்டியலில் இருந்த டேவிட் மில்லர் (ரூ. 3 கோடி, குஜராத்), சாம் பில்லிங்ஸ் (ரூ. 2 கோடி, கொல்கத்தா), விரிதிமன் சகா (ரூ. 1.9 கோடி, குஜராத்), மாத்யூ வேட் (ரூ. 2.4 கோடி, குஜராத்), உமேஷ் யாதவ் (ரூ. 2 கோடி, கொல்கத்தா), ரிம் சௌதி (ரூ. 1.5 கோடி, கொல்கத்தா), கருண் நாயர் (ரூ. 1.40 கோடி, ராஜஸ்தான்), எவின் லீவிஸ் (ரூ. 2 கோடி, லக்னோ), அலெக்ஸ் ஹேல்ஸ் (ரூ. 1.5 கோடி, கோல்கட்டா), லுங்கிடி (ரூ. 50 லட்சம், டில்லி), கிறிஸ் ஜோர்டன் (ரூ. 3.60 கோடி, சென்னை) ஒப்பந்தமாகினர்.

இந்திய ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜூன். வேகப்பந்துவீச்சாளரான இவரை, மும்பை அணி ரூ. 30 இலட்சத்திற்கு ஒப்பந்தம் செய்தது.

இரண்டாம் நாள் ஏலத்தில் இந்தியாவின் புஜாரா, இஷாந்த் சர்மா, சவுரப் திவாரி, சச்சின் பேபி, இங்கிலாந்தின் டேவிட் மலான், இயான் மார்கன், அவுஸ்திரேலியாவின் லபுசேன், ஆரோன் பின்ச், அடம் ஷம்பா, ஆன்ட்ரூ டை, கேன் ரிச்சர்ட்சன், நியூசிலாந்தின் கோலின் முன்ரோ, மார்டின் குப்தில் ஆகியோரை எந்த ஒரு அணியும் ஏலத்தில் எடுக்க முன்வரவில்லை. (ஐ)

# புலிகளுக்கும் ஜே.வி.பிக்கும் பெரிய வேறுபாடு இல்லை!

## அமைச்சர் நாமல் கூறுகிறார்

கொழும்பு, பெப். 15

**தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் இடையில் பெரிய வேறுபாடுகள் ஏதும் கிடையாது என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



பெலியத்த பகுதியில் இடம்பெற்ற ஆளும்கட்சி தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் பேசிய அவர், இரு தரப்பினரும் அழிவை முன்னிலைப்படுத்தி செயல்பட்டார்கள் எனக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொரோனா தொற்றுக்கு மத்தியில் நாட்டு மக்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து பொறுப்புடன் செயற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அரசாங்கத்தின் அனைத்து செயல் திட்டங்களையும் விமர்சிப்பது எதிர்க்கட்சியின் பிரதான அரசியல் கொள்கை.

இந்த விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் இடையில் பாரிய வேறுப்பாடுகள் ஏதும் கிடையாது.

ஆரம்ப காலத்தில் மக்கள் விடுதலை முன்னணி பாரிய கலவரங்களில் ஈடுப்பட்டமையினால் பல இளைஞர் யுவதிகள் கொல்லப்பட்டதை மக்கள் இன்றும் மறக்கவில்லை-என்றார். (அ)

## தொல்லியல் கட்டளை சட்டம் திருத்தம் செய்யப்படவுள்ளது

கொழும்பு, பெப். 15

தொல்லியல் கட்டளைச் சட்டம் திருத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், சிரேஷ்ட பேராசிரியர் அனுர மனதுங்க இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பான வரைபு தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தொல்லியல் கட்டளைச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டத்தின் பிரகாரம், தொல்பொருட்களைத் திருடும் நபருக்கு 3 வருட சிறைத் தண்டனை அல்லது 500,000 ரூபா அபராதம் விதிக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## பெய்து வரும் மழையினால் மின் உற்பத்திக்கு வாய்ப்பு

கொழும்பு, பெப். 15

கடந்த நாட்களில் பதிவான மழைவீழ்ச்சி காரணமாக 20 கிகாவோட் மின் உற்பத்தியை மேற்கொள்வதற்கு தேவையான நீர், கிடைக்கப்பெற்றுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், அது மின் துண்டிப்பை மேற்கொள்ளாதிருப்பதற்கு போதுமானது அல்லவென அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

20 கிகாவோட் மின் உற்பத்தியை மேற்கொள்வதற்கு தேவையான நீர் கிடைக்கப்பெற்றுள்ளதால், மின்சாரத்துக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாடு 47 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

மேலும் 200 மெகாவோட் மின்சாரம் எதிர்வரும் நாட்களில் மழைவீழ்ச்சியின் ஊடாக கிடைக்கப்பெறுமானால், சில நாட்களுக்கு மின் துண்டிப்பின்றி மின்சார விநியோகத்தை மேற்கொள்ள முடியும் என பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க குறிப்பிட்டார். (அ)

## தொற்றாளர்களில் 99 வீதமானோருக்கு ஒமைக்ரோன்

கொழும்பு, பெப். 15

தற்போது நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா நோயாளர்களில் 99 வீதமானவர்கள் ஒமைக்ரோன் பிறழ்வினால் பாதிக்கப்பட்டுள் ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெல்டா பிறழ்வானது படிப்படியாக மறைந்து வருவதாகவும் சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில், கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சைக்கு தேவையான படுக்கை வசதிகள் மருத்துவமனைகளில் இருப்பதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் கொரோனா நோயாளர்களுக்காக அதிதீவிர சிகிச்சை பிரிவுகளில் படுக்கைகளுக்கு பற்றாக்குறை இருப்பதாக வெளியாகும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 17 - 09 - 1948



மறைவு 05 - 02 - 2022

### திருமதி உலகராஜா இந்திராதேவி

யாழ். வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Sevran ஐ வதிவிடமாகவும் கொண்ட உலகராஜா இந்திராதேவி அவர்கள் 05.02.2022 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - ஜானகியம்மா தம்பதியரின் அன்பு மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராஜா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மூத்த மருமகளும், தம்பிராஜா உலகராஜா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான உதயகுமார், விஜயகுமார் மற்றும் வசந்தகுமார்(அப்பன் -பிரான்ஸ்), சுபேந்தினி(உஷி- ஜேர்மனி), உசேந்தினி(சத்தி- சுவிஸ்), தர்மினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,சுபாகரன்(ஜேர்மனி), செல்வானந்தவேல்(சுவிஸ்), கேசவன்(பிரான்ஸ்), ரூபி(சுவிஸ்), அஜந்தா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,சந்திரலேகா(சந்திரா- இலங்கை), ராணி (இலங்கை), இராஜேஸ்வரி(சுவிஸ்), பரமேஸ்வரி(ஜேர்மனி), அன்னராணி(ஆசிரியை யாழ். வல்வை மகளிர் கல்லூரி- இலங்கை), மனோகரி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற நடராஜா, கந்தசாமி, சிவம்(சுவிஸ்), அருந்தவராஜா(ஜேர்மனி), தனேஸ்வரன்(இலங்கை), தேவராஜா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும்,சின்னத்தம்பி, உலகேஸ்வரி, சிவக்கொழுந்து, இராஜேஸ்வரி, தவமணி(லண்டன்), இராஜலட்சுமி (இலங்கை வங்கி), ராஜ்குமார்(லண்டன்) ஆகியோரின் அன்பு மச்சாளும்,கமலா, காலஞ்சென்ற நடராஜா, பாஸ்கரசாமி, துரைராஜா ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும்,அனுஜன், நிலக்ஷன், ஆதித்தியன்(ஆதி), மதுஷன், நிதுஷன், சாருஹா, திவிஷா, அனோஸ்கா, லாருஜன், ருஷாந், அக்ஷிதா, சஞ்சிதா, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

பார்வைக்கு
Thursday, 10 Feb 2022 3:30 PM - 4:30 PM
Saturday, 12 Feb 2022 3:30 PM - 4:30 PM
Sunday, 13 Feb 2022 3:30 PM - 4:30 PM
Tuesday, 15 Feb 2022 3:30 PM - 4:30 PM
PFG - POMPES FUNÈBRES GÉNÉRALES 83 Bd Robert Ballanger, 93420 Villepinte, France

கிரியை
Wednesday, 16 Feb 2022 10:30 AM - 12:30 PM
PFG - POMPES FUNÈBRES GÉNÉRALES 83 Bd Robert Ballanger, 93420 Villepinte, France

தகனம்
Wednesday, 16 Feb 2022 1:30 PM - 2:30 PM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்..

தொடர்புகளுக்கு:
**வசந்தன் - மகன்** Mobile : +33652751839
**உசேந்தினி - மகள்** Mobile : +4917663382750
**தர்மினி - மகள்** Mobile : +33782405050
**சக்தி - மகள்** Mobile : +41433338561

தகவல்:
**நண்பர்கள்**



## மரண அறிவித்தல்

தோற்றம் 24 - 09 - 1956



மறைவு 04 - 02 - 2022

### திருமதி சிறிகரன் லீலாவதி

சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Mantes-la-Jolie ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிறிகரன் லீலாவதி அவர்கள் 04.02.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - அன்னம் தம்பதிகயரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - நேசரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், சிறிகரன் அவர்களின் அன்பு மனைவியும், அனுசா (துர்க்கா), ஜெயந்தி, சாயி, யாதவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, முத்துத்தம்பி மற்றும் மனோன்மணி(தேவி), பத்மராணி(ராணி) ஆகியோரின் பாசமிகு அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற Dr.சிறிதரன், சதாயினி, சிறிபவன், சிறிகுகன், சயேந்திரா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

பார்வைக்கு
Tuesday, 15 Feb 2022 9:30 AM - 11:30 AM
Cimetière de Limay Rue des 4 Chemins, 78520 Limay, France

கிரியை
Tuesday, 15 Feb 2022 11:30 AM - 12:30 PM
Cimetière de Limay Rue des 4 Chemins, 78520 Limay, France

தகனம்
Tuesday, 15 Feb 2022 12:30 PM - 1:00 PM
Crematorium Yvelines 52 Rue de la Nouvelle France, 78130 Les Mureaux, France

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு
**சதாசிவம் சிறிகரன் - கணவர்** Mobile : +33695461134

## தீவுகளுக்கான...

இதனைத் தெரிவித்தார்.

மேலும், தீவக பொது போக்குவரத்தில் அடிக்கடி படகுகள் பழுதடைவதால் தடைப்படுகிறது. இதேநேரம் பொதுமக்கள் மிகவும் ஆபத்தான கடல் பயணங்களை மேற்கொள்ளும்போது பயணமானது மிகவும் அபாயமாகக் காணப்படுகிறது.

தீவகத்துக்கான பொதுப் போக்குவரத்து தொடர்பில் பல தடவைகள் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம். வீதி அபிவிருத்தி அதிகார சபை படகுகள், பாதை மற்றும் குமுதினி படகை இயக்கி வருகிறார்கள். குமுதினி படகு பழுதடைந்துள்ளது. இதேபோல நெடுந்தாரகை, வடதாரகை சமுத்திரா போன்ற படகுகள் பிரதேச சபையால், கூட்டுறவு அமைப்பால் இயக்கப்படுகின்றன.

இதேவேளை வடதாரகை இலங்கை கடற்படையினரால் இயக்கப்படுகின்றது. இந்தப் படகுகள் அடிக்கடி பழுதடைவதன் காரணமாக நெடுந்தீவுக்கான போக்குவரத்து அடிக்கடி தடைப்படுகிறது.

ஏனைய தீவுகளில் படகு பாதை தற்போது சீரமைக்கப்பட்டு பயணம் தொடர்ந்தாலும் இயந்திரம் பழுதடைந்து நிலைமையில் பாதையை இயக்க முடியாது உள்ளது.

இன்றும் (நேற்றும்) கூட பொதுமக்கள் பிரதிநிதிகள் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர். அதாவது இந்த படகு, பாதையை சீரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

அண்மைக்காலங்களில் ஊடகங்களிலும் இந்த பிரச்னைகள் வலுப்பெற்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. நாங்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, மற்றும் ஏனைய திணைக்களங்களுடனும் வடமாகாண ஆளுநருடன் இணைந்து சகல தரப்பினருடன் கலந்துரையாடல்களை நடத்தி இது பற்றி ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்து இருக்கின்றோம்.

இருந்த போதிலும் சில நடைமுறை சிக்கல்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் காரணமாக அவற்றை முழுமையாக அமுல்படுத்துவதில் சற்று சிரமம் காணப்படுகின்றது. இருந்தபோதிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபை இந்த படகு போக்குவரத்து சேவை முழுவதையும் பொறுப்பெடுத்து அங்கு ஒரு மத்திய நிலையத்தை அமைத்து அங்கு ஒரு தகுதிவாய்ந்த பொறியியலாளரின் கீழ் அந்த படகு பாதை சேவைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்வதற்கு உரிய வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதற்குரிய முன்மொழிவுகள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரிடம் விடுத்துள்ளோம். அது தொடர்பில் உரிய அமைச்சுக்கு அனுப்பியுள்ளோம். எனவே, வீதி அபிவிருத்தி அதிகார சபை அமைச்சே இதற்கு முடிவெடுக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இருந்தபோதிலும் சில நடைமுறை சிக்கல்கள் சட்ட ஏற்பாடுகள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் முடிவெடுத்து ஒரு தீர்மானம் எடுக்க வேண்டிய கடப்பாடு நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் போக்குவரத்து அமைச்சுக்கு காணப்படுகின்றது. இதனை துரிதப்படுத்தி பொதுமக்களுக்குரிய சேவையை சீராக்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். இருந்த போதிலும் தாமதம் அடைவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். பொது மக்கள் இதனால் மிகவும் அவதியுறும் நிலையுள்ளது.

இதனை செயல்படுத்த ஒரு விசேட கலந்துரையாடல் மூலம் மேலமட்டத்துடன் ஒரு தீர்மானம் எடுப்பதற்குரிய நடவடிக்கை எடுத்து வருகின்றோம். எனினும், மாவட்ட மட்டத்தில் பல தடவைகள் கூட்டங்களை நடத்தியும் உரிய தீர்வு கிடைக்கவில்லை - என்றார். (ஐ-3)

## இந்திய...

அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிம்ஸ்டெக் அமைப்பில் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய 7 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அந்தவகையில் அரச தலைவர்களுக்கு நாம் அழைப்பு விடுத்துள்ளோம். இந்தியா சென்ற போது, பிரதமர் மோடிக்கான எமது ஜனாதிபதியின் அழைப்பை, அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சரிடம் கையளித்தேன்-என்றார். (அ)

## பயங்கர...

நிலையத்தின் (CPA) நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றால், அதற்கு நாடாளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை தேவை. அல்லது சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்படவேண்டும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## வல்லிபுர...

நடைபெறவுள்ளது.

இதைத் தொடர்ந்து, நாளை புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு கற்கோவளப் பகுதியில் வங்கக்கடலில் சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக கடந்த வருடத்துக்கான பெருந்திருவிழா கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## மார்ச்சில்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

தான் விடுத்த அழைப்பை ஏற்றே அவர் இங்கு வருகிறார் எனவும் பீரிஸ் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கைக்கு உதவி, ஒத்துழைப்பு தேவைப்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இந்தியா முன்வந்து உதவுவதாகவும், இரு நாடுகளுக்கும் இடையில் உச்சபட்ட நட்பு நிலவுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## நாட்டில்...

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,

நாட்டில் 100 சதவீதம் ஒமைக்ரோன் பரவல் காணப்படுகிறது. தற்போது வைத்தியசாலைகளில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்படும் தொற்றாளர்கள் அனைவரும் எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்களாகவே உள்ளனர். தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் ஒமைக்ரோனிடமிருந்து தப்பிக்க முடியாது.

காரணம் இரு கட்ட தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள் கூட அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்படுகின்றனர். கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் மூன்று கட்ட தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்ட ஒரு தொற்றாளர் சிகிச்சை பெற்று வருகின்றார். எனினும், இவர் நீண்ட கால மாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவராவார். எவ்வாறிருப்பினும் இவர் மூன்று தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டுள்ளமையால் கோவிட் தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்புவார் என்று நாம் நம்புகின்றோம் - என்றார். (ஐ)

# பத்திரிகையாளர் சிவநாயகம் நினைவு முத்திரை வெளியீடு!

கொழும்பு, பெப். 15

பிரபல பத்திரிகையாளரான எஸ். டி. எஸ். என்று அறியப்பட்ட எஸ். டி. சிவநாயகத்தின் 100ஆவது ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு ஞாபகார்த்த முத்திரை நாளை புதன் கிழமை வெளியிடப்படுகின்றது.



இந்த நிகழ்வு புதுசெட்டித்தெரு சாய் மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை இலங்கை முத்திரை பணியகம் செய்து வருகின்றது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வெ. இராதாகிருஷ்ணனின் வழிக்காட்டலில் மூத்த பத்திரிகையாளர் எச். எச். விக்கிரமசிங்க அண்மையில் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அலகப்பெருமவை சந்தித்து எஸ். டி. எஸ். சிவநாயகத்தின் பத்திரிகை, ஆன்மீக பணிகள் குறித்து விளக்கிக் கூறினார். இதைத் தொடர்ந்து எஸ். டி. எஸ். சிவநாயகம் நினைவாக முத்திரை வெளியிட அமைச்சர் ஏற்பாடுகளை செய்தார்.

பழம்பெரும் பத்திரிகையாளரான எஸ். டி. எஸ். சிவநாயகம் கொழும்பில் வெளியான தினபதி - சிந்தாமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியராக பணியாற்றியவர். இவர், தினகரன், சுதந்திரன், வீரகேசரி, சூடாமணி பத்திரிகைகளின் ஆசிரியராகவும் விளங்கியிருந்தார். 50 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி இவர் பல முன்னணி பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களை உருவாக்கியிருந்தார்.

சாயி பக்தரான இவர் சத்திய சாய் பாபா மத்திய நிலையத்தையும் கொழும்பில் ஸ்தாபித்ததுடன் 25 வருடங்கள் அதன் தலைவராகவும் செயல்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரின் ஞாபகார்த்த முத்திரை விற்பனை மூலம் கிடைக்கும் நிதி தற்போது புது செட்டித்தெரு சாய் நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இராஜகோபுர பணிகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளது. (ஐ)

# தீயில் எரிந்த கர்ப்பவதி பெண் சிகிச்சை பலனின்றி மரணம்!

வடமராட்சி, பெப். 15

தீயில் எரிந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த ஐந்து மாத கர்ப்பவதி பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் யாழ்ப்பாணம், கரணவாய், மண்டான் பகுதியைச் சேர்ந்த மிதுனராஜ் மிதுனா (வயது- 29) என்பவராவார்.

குறித்த பெண் கடந்த 6ஆம் திகதி தீயில் எரிந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று தெரிய வருகின்றது. (ஐ - 2)

## கொரோனாவுக்கு 36 பேர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 15

நாட்டில் நேற்று முன்தினம் கொரோனா தொற்றால் மேலும் 36 பேர் உயிரிழந்தனர் அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில், அந்த வகையில், 30 - 59 வயதுக்கு இடைப்பட்ட 5 ஆண்களும், ஒரு பெண்ணுமாக 6 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 15 ஆண்களும் 15 பெண்களுமாக 30 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15ஆயிரத்து 844 ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

## ஏறாவூரில் ஹெரோயினுடன் நால்வர் கைது!

ஏறாவூர், பெப். 15

ஏறாவூரில் ஹெரோயின் மற்றும் கஞ்சா போதை பொருளுடன் பெண் ஒருவர் உட்பட 4 பேரை நேற்று முன்தினம் இரவு தாம் கைது செய்துள்ளனர் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில், மீராங் கேணி பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றை பொலிஸார் சுற்றிவளைத்து நடத்திய சோதனையில், பெண் ஒருவரிடம் இருந்து 230 , மில்லிக்கிராம் ஹெரோயின், இரு ஆண்களிடமிருந்து 135, மற்றும் 235, மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் மூவரும் கைதாகினர்.

இதனைத் தொடர்ந்து அந்த பகுதியில் 535 மில்லிக்கிராம் கஞ்சாவுடன் ஒருவரை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட 4 பேரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஐ.நா...

வெளிவிவகார அமைச்சுக்கு வழங்குவதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் உறுதியளித்துள்ளதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

ஐந்து நாட்களுக்குள் இலங்கை பதில் அளிக்கவேண்டும் என்றும், உரிய பதில்கள் கவனமாக தொகுக்கப்பட்டு பெப்ரவரி 19 ஆம் திகதி ஜெனிவாவுக்கு அனுப்பப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் இலங்கை கலந்து கொள்வதன் மூலம் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இலங்கையின் நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்தின் பெரும்பான்மையான சமூகம் ஏற்றுக்கொள்ளும் என வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தினார். (அ)

## தமிழ்...

ஆரம்பமாகவுள்ள நிலையில், மனித உரிமைகள் பேரவைக்கும் அதன் அங்கத்துவ நாடுகளுக்கும் கடிதம் அனுப்ப இந்த கட்சிகள் திட்டமிடுவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## டெங்கு...

முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த மாணவன் அண்மையிலேயே புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

ஈழநாடு
Eelanadu

# அரசியல் செல்வாக்கை பாவித்து மன்னாரில் கனிய மணல் அகழ்வு!

## அவுஸ்திரேலிய நிறுவனம் மீது குற்றச்சாட்டு

மன்னார், பெப். 15

**உயர் அரச மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களை கருவிகளாக பாவித்து உரிமங்களை பெற்று கனிய மணல் அகழ்வு நடவடிக்கையை அவுஸ்திரேலிய கம்பெனி தொடர்வதாக நாங்கள் அறிகிறோம். இந்த மணல் அகழ்வினால் இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள , முஸ்லிம் மக்களுக்கு எந்த ஒரு நன்மைகளும் இல்லை என "மன்னார் சுற்றாடலை பாதுகாப்போம்" அமைப்பினர் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளனர்.**

நேற்று திங்கட்கிழமை காலை மன்னாரில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

மன்னாரில் சுமார் 5 வருடங்களுக்கு மேலாக கனிய மணல் ஆய்வுகள் மிகவும் இரகசியமான முறையில் அவுஸ்திரேலிய நிறுவனத்தால் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

மன்னாரிலுள்ள சுற்றாடலை பாதுகாப்போம் அமைப்பு பெற்றுக்கொண்ட தகவல்கள் அடிப்படையில் மதத் தலைவர்கள், பிரஜைகள் குழு, பொதுமக்கள் இணைந்து எமது எதிர்ப்பை வெளியிட்டு ஜனாதிபதி வரை தெரிவித்திருக்கிறோம்.

அண்மையில் எம்மோடு கலந்துரையாடிய பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் எங்கள் ஆதங்கங்களை கேட்டு இந்த மாதத்தின் இறுதியில் அவுஸ்திரேலியத் தூதருடன் மன்னாரில் உள்ள எமது குழுக்களையும் இணைத்து பேச்சு நடத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள சனத் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மன்னார் தீவுக்குள் வசிக்கிறார்கள்.

இரண்டு கிலோ மீற்றர் அகலமும் 30 கிலோ மீற்றர் நீளமும் கொண்ட ஒரு குறுகிய தீவு பகுதி முற்று முழுதாக குறுகிய காலத்தில் கடலில் மூழ்கும் நிலை ஏற்படும்.

1980 ஆம் ஆண்டுகளில் மன்னார் நகரச் செயற்பாடுகளை உயிலங்குளத்தில் அமைப்பது தொடர்பாக ஒரு திட்டம் அரசிடம் இருந்தது. ஒரு சில அரசியல் காரணங்களால் அவை தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

இந்த மன்னார் தீவுக்குள் மாவட்ட செயலகம், பொது வைத்தியசாலை , வங்கிகள், நான்கு தேசிய பாடசாலைகள் என முக்கியமான அனைத்துச் செயல்பாடுகளும் இந்த தீவுக்குள் தான் இருக்கின்றன.

இந்த மணல் அகழ்வுகள் தொடருமாக இருந்தால் கடலுக்குள் மூழ்கி மன்னார் மாவட்டம் செயலிழந்து சூனியப் பிரதேசமாக மாறிவிடும்.

ஆகவே எங்களால் முடிந்த அளவு மக்களை திரட்டி அரசு அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி வரை ஆதங்கத்தை தெரியப்படுத்துகிறோம். தொடர்ந்து தெரியப்படுத்துவோம்.

ஆனால் தாங்கள் எந்த அளவுக்கு எதிர்ப்புகளை தெரிவிக்கின்றோமோ அந்த அளவுக்கு அவுஸ்திரேலிய நிறுவனம் இதை ஆய்வு செய்வதில் முனைப்புக் காட்டி வருகிறார்கள்.

எமது எதிர்ப்புகளால் புவிச்சரிதவியல் திணைக்களம் இதற்கான உரிமத்தை நிறுத்தி இருந்தது. ஆனால் தற்போது ஆராய்ச்சி செய்வதற்கு புவிச்சரிதவியல் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

அது எவ்வாறு நடைபெற்றது என்பதை எங்களால் அறிய முடியாமல் இருக்கிறது.

இதில் மிகவும் வேதனையான விடயம் என்னவென்றால் இந்த கனிய மணல் அகழ்வு தொடர்பாக மன்னார் மாவட்டத்தில் இருக்கும் உயர் அரச அதிகாரிகளுக்கு எதுவும் தெரியாது என்று கை விரிக்கின்றார்கள்.

எது எப்படி இருந்தாலும் உயர் அரச மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களை கருவிகளாக பாவித்துத்தான் இந்த உரிமங்களை பெற்று கனிய மணல் அகழ்வு நடவடிக்கையை அவுஸ்திரேலிய கம்பனி தொடர்வதாக நாங்கள் அறிகிறோம். இந்த மணல் அகழ்வினால் இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள , முஸ்லிம் மக்களுக்கு எந்த ஒரு நன்மைகளும் இல்லை.

இதனால் ஆதாயம் பெற போவது அந்நிய நாடுகளும் அவர்களோடு சேர்ந்த இயங்குகின்ற சில முகவர்களும்தான்-என்றனர். (அ)

# பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த யார் ஆட்சிக்கு வந்தாலும் முடியாது!

## சந்திரகாந்தன் எம். பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, பெப். 15

தற்போதுள்ள சூழ்நிலையில் எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வந்தால் மந்திரத்தால் மாங்காய் பறிக்கலாம் என்ற சூழ் நிலையை ஊடகங்கள் உருவாக்க முயற்சிக்கின்றன. யார் ஆட்சிக்கு வந்தாலும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் சடுதியான மாற்றத்தைக் கொண்டுவர முடியாது என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

வவுணதீவில் நேற்று ஒரு நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு, மேலும் கூறுகையில், "நாடு இக்கட்டான சூழ்நிலையில் உள்ளபோதிலும் அரசாங்கம் கிராம மட்ட பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவருகின்றது. அதன் அடிப்படையிலேயே சமுர்த்தி பயனாளிகளுக்கு அமைச்சரவையின் அனுமதியுடன் அதிகநிதி வழங்கப்படுகின்றது.

அரசு, செலவீனங்களை மிகக் கடுமையாக கட்டுப்படுத்தி வருகின்றது. எங்களுக்குக்கூட பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் செலவுகளை கட்டுப் படுத்துவது போன்று குடும்பங்களும் அத்தியாவசிய தேவைகளுக்கு பணத்தை செலவு செய்யவேண்டும். இன்று கிராம மட்டத்தில் இவ்வாறான நிலையேற்பட்டுள்ளதை காணமுடிகின்றது - என்றார். (ஐ)

# ரூபாயை மிதக்கவிட்டால் டொலர் 300 ரூபாவாகும்!

## தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப். 16

அமெரிக்க டொலருக்கு இணையாக இலங்கை ரூபாயை மிதக்கவிட இடமளிக்குமாறு பல தரப்பினர் கோரிக்கை விடுத்தாலும் ரூபாயை மிதக்கவிட்டால், முதலில் டொலரின் பெறுமதி சுமார் 300 ரூபாயாக அதிகரிக்கும் என ராஜாங்க அமைச்சர் தயா சிறி ஜயசேகர தெரிவித்தார்.

குருணாகலில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரூபாயை டொலருக்கு நிகராக மிதக்க விடுமாறு பெரிய கோரிக்கை விடுக்கப்படுகிறது. அப்படி செய்தால், டொலரின் பெறுமதி 300 ரூபாய் வரை உயரும். அதன் பின்னர், ஏறி, இறங்கி 250 ரூபாய் வரை குறையும்.

இதனால், முடிந்தளவுக்கு அனைத்தையும் நாட்டுக்குள் உற்பத்தி செய்யும் வேலைத்திட்டதை உருவாக்கவேண்டும். இதன் காரணமாக வாழ்வாதார அபிவிருத்திக்காக அமைச்சர் பஸில் ராஜபக்ஷ லட்சம் வேலைகள் என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

இதன் ஊடாக கிராதத்துக்குள் உற்பத்தி செய்ய தேவையான வேலைகளை நாம் செய்வோம். அதற்கு நாங்கள் முன்னுரிமை வழங்கியுள்ளோம்-என்றார். (அ)

# மலையக மக்களின் துன்பங்களை எடுத்தியம்பும் புகைப்பட கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப். 15

மலையக மக்களின் வாழ்வியல் மற்றும் துன்பங்களை எடுத்தியம்பும் புகைப்பட கண்காட்சி ஒன்று நேற்று யாழ்ப்பாணம் - நக்கா வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் ஆரம்பமானது.

மாற்றுக்கொள்கைக்கான மத்திய நிலையம் மற்றும் மலையக இளைஞர் யுவதிகளின் முயற்சியில் இடம் பெறும் இக் கண்காட்சியை பல்வேறு தரப்பினரும் பார்வையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# ஊழியர் சேம இலாப நிதியத்தில் கை வைத்தால் சட்ட நடவடிக்கை

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, பெப். 15

ஊழியர் வருங்கால வைப்பு நிதிக்கு கூடுதல் கட்டண வரி வட்டவரையின் மூலம் 25 சதவீத வரி விதிக்கும் முடிவுக்கு எதிராக, எடுக்கப்படவேண்டிய சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்து தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, தொழிலாளர்களின் நிதியை பறிப்பதற்கு அரசாங்கத்திற்கு எந்த உரிமையும் இல்லை எனக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும்போது, 2 பில்லியனுக்கும் அதிகமான இலாபம் ஈட்டும் நிறுவனங்களுக்கு 25 சதவீத மேலதிக வரி விதிக்கப்படும் என நிதி அமைச்சர் பாராளுமன் றத்தில் தெரிவித்தார்.

நிதியமைச்சரின் இந்த கருத்துடன் நாம் உடன்படவில்லை. ஏனெனில் வணிகர்கள் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் இழக்க நேரிடும், அது முதலீடுகளையும் பாதிக்கும்.

ஊழியர் சேம இலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு பாராளுமன்றத்தில் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. உத்தேச கூடுதல் கட்டணத்தின் மூலம் ரூபா 70 பில்லியனுக்கும் அதிகமான தொகையை பெற அரசாங்கம் முயற்சிக்கிறது.

அரசாங்கத்தின் தீர்மானத்துடன் நாம் உடன்படவில்லை. இதனால் அந்த தவறான வர்த்தமானி அறிவித்தலை மாற்றியமைக்குமாறு கோருகிறோம். எனினும், வர்த்தமானி மாற்றப்படுவதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லையென்பதும் எமக்கு தெரியும்.

தொழிலாளர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவும் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு தனது எதிர்ப்பை எழுப்பியிருந்தார்.

தற்போதைய நிர்வாகம் இந்த நிதியை அரசியல் திட்டங்களுக்காக பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது-என்றார். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர் - மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - புலி,ரஜனி முருகன் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்



**இரவு**

7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : BLACK AND WHITE

**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**சிவா ஒளி**

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு